மாத இதழ் ரூ.10/-
Monthly Issue Rs.10/-

வருட சந்தா ரூ.100/-
Yearly Subscription Rs.100/-

# தேவனுடைய வார்த்தை

# DHEVANUDAIYA VAARTHAI

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக (கொலோ 3:16)

மலர் / Volume 18 இதழ் / Issue 2 பிப்ரவரி / Feb 2020

## தந்தையின் இதயம் இரணமானதேன்?

பக்கம் - 2



"..உன் நாட்கள் நீடித்திருப்பதற்கும், நீ நன்றாயிருப்பதற்கும்,
உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டபடியே,
உன் தகப்பனையும், உன் தாயையும் கனம்பண்ணுவாயாக"

[உபா.5:16]



# தந்தையின் இதயம் இரணமானதேன்?

குழந்தைப் பருவத்தில் உன்னை மீட்டெடுக்க வழியின்றி அறுவை சிகிச்சைக்காக முதன் முதலாக நகையை விற்றேன்...

முதலிடத்தில் உள்ள பள்ளியில் உன்னை முதல் வகுப்பில் சேர்ப்பதற்கு நன்கொடை கட்டமுடியாமல் பரம்பரைச் சொத்தான நிலத்தை விற்றேன்...

அடுத்தடுத்த வகுப்புகளுக்கு ஆடுகளை விற்றேன்...

மேல்நிலைப் படிப்புகளுக்கு மாடுகளை விற்றேன்...

உன்னுடைய சுற்றுலாச் செலவுகளுக்கு என்னைச் சுற்றி இருந்த பொருள்களை எல்லாம் விற்றேன்...

உன் பயணச் செலவுக்காகப் பல சமயம் என் பசியை விற்றேன்...

தேர்வு நாட்களில் உனக்கு தேநீர் கொடுக்கவே என் தூக்கத்தை விற்றேன்...

கடைசியில் உன் கல்லூரிப் படிப்புக்காக நான் ஆசைப்பட்டுக் கட்டிய வீட்டையும் விற்றேன்...

படித்தாய்... வளர்ந்தாய்... உயர்ந்தாய்...

வாங்கினாய் மீண்டும் எல்லாவற்றையுமே...

இன்று நீ இருப்பதோ மூன்றடுக்கு இல்லத்தில்... ஆனால் **நான் இருப்பதோ முதியோர் இல்லத்தில்....**

எல்லாம் விற்றும் என்னிடம் இருந்தது இதயம்...

எல்லாமே பெற்றும் உன்னிடம் இல்லாமல் போனது இதயம்....!" ●

நன்றி: "என் பார்வை" தினமலர் 29.11.19

---

**"தன் தகப்பனையும் தன் தாயையும் தூஷிக்கிறவன் சபிக்கப்பட்டவன்" (உபா.27:16)**

**(Cursed is the one who treats his father or his mother with contempt) (Deut.27:16)**

---

## நம்மை அவமதிப்போருக்கு என்ன பதில் சொல்லுகிறோம்?

ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டார். அவருடன் பணியாற்றிய அதிகாரி ஒருவர் அவரை தாழ்வுபடுத்தும் எண்ணத்தில் லிங்கனிடம் "உங்கள் தந்தை தைத்த செருப்பு இப்போது கூட நன்றாக இருக்கிறது" என்றார். உடனே லிங்கன் எந்த தயக்கமுமின்றி "இனிமேல் அச்செருப்பு கிழிந்தால் கூட என்னிடமே தரலாம். நான் தைத்துக் கொடுக்கிறேன்" என்றார். அந்த அதிகாரிக்கு அதற்கு மேல் பேச வார்த்தை வரவில்லை.

நன்றி: "என் பார்வை" தினமலர் 25.11.19 ●



**மலர் - 18 பிப்ரவரி - 2020 இதழ் - 2**

**பொருளடக்கம்**



| | |
|---|---|
| 1. தலையங்கம் | 3 |
| 2. கண்ணீரோடே விதைப்போம் | 6 |
| 3. என்னைத் தொழுதுகொள்ளுங்கள் | 10 |
| 4. கிறிஸ்தியானின் மோட்சப்பிரயாணம்-(7) | 11 |
| 5. உயர் நீதிமன்றத் தீர்ப்பு | 14 |
| 6. யார் என் நுகத்தடியை முறித்து..பாகம்-2 | 15 |
| 7. நீதியின் விளைச்சலை வர்த்திக்க..பாகம்-2 | 20 |
| 8. கிறிஸ்தவ வாழ்வில் பரிசுத்தம் | 22 |
| 9. தற்பரிசோதனைக் கேள்விகள் | 26 |
| 10. எனக்கு ஏன் சோதனை? | 27 |
| 11. செய்திகள் .... | 2, 14 |



**K. செல்வின் தங்கதுரை**
தொகுப்பாசிரியர்
செல்: 98421 43523 / 90873 06940

**வேர்டு ஆஃப் கிரைஸ்ட் அலுவலகம்**
**D.No.23-B, "தை கிரேஸ்"**
செபஸ்டியார் கோவில் தெரு, நியூ எல்லீஸ் நகர் விரிவாக்கம், மதுரை - 16.
**போன்:** (0452) 4345580.
E-mail : wocmdu@gmail.com

**நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கை யாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்.**

**(எபே.2:10).**

**கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,**

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

நம்மைப் படைத்த ஆண்டவர் நம்மைக் குறித்து ஒரு **நோக்கமும்** (purpose) அந்த நோக்கத்தைச் செயல்படுத்த ஒரு **திட்டமும்** (Plan) வைத்திருக் கிறார் என்பதை தலைப்பு வசனத்திலிருந்து நாம் விளங்கிக் கொள்ளுகிறோம். உதாரணமாக • நெறிகெட்டு வாழ்ந்த இஸ்ரவேல் மக்களைச் சீர்ப்படுத்தும் பொருட்டு கர்த்தர் **எரேமியா** தீர்க்கதரிசியின் தெரிந்தெடுப்பைக் குறித்து "நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படு முன்னே நான் உன்னைப் பரிசுத்தம் பண்ணி உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளை யிட்டேன் என்று சொன்னார்" என்று (எரே.1:5)ல் காண்கிறோம். • இராஜா வின் கட்டளையின் காரணமாக **மோசே** பிறந்தவுடனேயே மரணத்திற்கு நியமிக்கப்பட்டவன். ஆனாலும் கட்டளையை மீறி மோசேயின் பெற்றோர்,

மோசேயை வளர்த்தார்கள். எனினும் மூன்று மாதத்துக்குப் பின் மோசேயை நாணல் பெட்டியில் வைத்து நதியில் விட்டனர். மரணத்திற்கு நியமிக்கப்பட்ட மோசே கட்டளை பிறந்த அதே இராஜ அரண்மனையில் இளவரசியின் மகனாக வளர்ந்தான். பின் நாட்களில் எகிப்தில் அடிமையாக வாழ்ந்த மக்களை விடுவித்து கானான் தேசத்திற்கு வழிநடத்தும் தலைவனாகக் கர்த்தர் அவனைத் தெரிந்துகொண்டார். **நோக்கத்தையும், நோக்கம் நிறைவேற திட்டத்தையும், திட்டம் நிறைவேற செயல்பாட்டையும் அவரே கொடுத்து நடத்துகிறார். • எஸ்தர்,** யூத குலத்தைச் சேர்ந்த அடிமைப்பெண். பெர்சிய பேரரசில் அவளுக்கு ஏன் இராஜ மேன்மை கொடுக்கப்பட்டது? அவளது வளர்ப்புத் தந்தை மொர்தெகாய் அதை அவளுக்கு உணர்த்தினான் (எஸ்தர்.4:14). யூத மக்கள் முற்றுமாக அழிக்கப்பட சூசான் அரண்மனையிலிருந்து கட்டளை கையெழுத்தான போதும் கூட அதே சூசான் அரண்மனையில் பட்டத்து இராணியாகிய எஸ்தர், இராஜாவின் சமுகத்திற்குச் சென்று பரிந்து பேசினாள். **"யூதரின் பகைஞர் அவர்களை மேற்கொள்ளலாம் என்று நம்பினார்களே; அந்நாளில் தானே, யூதரானவர்கள் தங்கள் பகைஞரை மேற்கொள்ளும்படிக்குக் காரியம் மாறுதலாய் முடிந்தது (எஸ்தர்.9:1). "யூதருக்குள்ளே அது மகிழ்ச்சியும், களிப்பும், விருந்துண்டு கொண்டாடும் நல்ல நாளுமாயிருந்தது. யூதருக்குப் பயப்படுகிற பயம் தேசத்து ஜனங்களைப் பிடித்ததினால் அவர்களில் அநேகர் யூத மார்க்கத்தில் அமைந்தார்கள்"** (எஸ்தர்.8:17).

இதுபோன்ற நிகழ்வுகள் வேதகாலத்தோடு முற்றுப் பெற்றுவிட்டதா? அல்ல, டாக்டர்.கெய்ம் வெய்ஸ்மேன் (Dr.Chaim Weizman) ஒரு யூத, இரசாயன விஞ்ஞானி. 1904 முதல் இங்கிலாந்தில் வாழ்ந்து வந்தார். சோள வகை தானியத்திலிருந்து (Maize) அசிட்டோன் (Acetone) எனும் திரவத்தைக் கண்டு பிடிக்க ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார். இது கப்பல்களில் பொருத்தப் பட்டிருக்கும் பீரங்கிகள் மற்றும் துப்பாக்கி வகைகள் தயாரிக்கவும் அவற்றைச் சுத்தம் செய்து பாதுகாப்பான நிலையில் வைக்கவும் அசிட்டோன் இன்றியமையாதது. 1914ஆம் ஆண்டு முதலாம் உலக யுத்தத்தின்போது ஜெர்மனிக்கும், இங்கிலாந்துக்கும் யுத்தம் தொடங்கியது. அப்பொழுது ஐரோப்பாவிலுள்ள ஒருவகை மரத்திலிருந்து அசிட்டோன் தயாரிக்கப்பட்டது. ஆனால் யுத்தம் காரணமாக அவைகளைக் கொண்டு வர முடியவில்லை. இதன் காரணமாக இங்கிலாந்தின் கப்பற்படை செயலிழந்து தோல்வியைத் தழுவும் அச்சநிலை ஏற்பட்டபோது, டாக்டர்.கெய்ம் வெய்ஸ்மேன் தனக்குப் போதுமான அளவு சோளத்தை சேகரித்துக் கொடுத்தால் அசிட்டோன் தயாரித்துத் தருவதாக உத்தரவாதமளித்தார். அதை தயாரித்துக் கொடுத்தார். யுத்தத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றது. இந்த கண்டுபிடிப்பு வெற்றிக்கு மூலகாரண

மாயிருந்தது என்ற பெரும் பாராட்டுதலைப் பெற்றார். இங்கிலாந்து அரசு அவரை கவுரவிக்க வேண்டுமெனப் பெரிய அளவில் ஏற்பாடுகள் செய்தது. அப்பொழுது அவர் விரும்பும் வெகுமதி கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்து அவரைக் கேட்டபோது “எனக்கு எந்த வெகுமதியும் வேண்டாம். ஆனால், யுத்தத்தில் துருக்கியிடமிருந்த பாலஸ்தீன தேசம் இங்கிலாந்தின் வசம் வந்திருப்பதினால் பாலஸ்தீன தேசத்தில் யூத மக்கள் குடியேற அனுமதி தரவேண்டும்” என்ற விண்ணப்பத்தை வைத்தார். பால்போர் பிரகடனத்தின் படி (Balbore declaration) யூதர்களின் குடியேற்றம் அனுமதிக்கப்பட்டது. இரண்டாவது உலக யுத்த முடிவில் இஸ்ரவேல் தேசம் யூதர்களுக்கு சொந்த தேசமாகக் கொடுக்கப்பட்டது. டாக்டர்.கெய்ம் வெய்ஸ்மேனுக்கு தான் சார்ந்திருக்கும் யூத குலத்தார் மீது அவருக்கிருந்த கரிசனையைப் பாருங்கள். தனக்கு வெகுமதி வேண்டாம். சிதறடிக்கப்பட்ட எங்கள் மக்களுக்கு யூததேசம் கிடைத்தால் போதும் என்ற உணர்வு எவ்வளவு மேன்மையானது. இஸ்ரவேல் தேசம் உருவாக அவர் மூலகாரணராயிருந்தார்.

இன்றும் பாராளுமன்றத்திலும், மாநிலச் சட்டசபைகளிலும் தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்களாகவும், அரசுப்பணியில் உயர் பதவிகளில் இருக்கும் சிலாக்கியத்தையும் பெற்ற கிறிஸ்தவர்கள், இக்கட்டுகளிலிருக்கும் கிறிஸ்தவ சமூகத்தினருக்கும் அவர்கள் வழிபடும் ஆலயத்திற்கும், சபைக்கும் உதவும் கரம் நீட்ட முன் வரலாமே. ஏன் தயக்கம்? இதற்காகவே இந்த இராஜ மேன்மையை ஆண்டவர் தந்திருக்கலாமே.

மறைந்த அமெரிக்க ஜனாதிபதி ஜான் கென்னடி “தேசம் எனக்கு என்ன செய்தது என்று கேட்காதீர்கள். தேசத்திற்கு நான் என்ன செய்யவேண்டும் என்று கேளுங்கள்” (Ask not what your country can do for you, Ask what you can do for your country) என்று அறைகூவல் விட்டார். “சபை எனக்கு என்ன செய்தது என்று கேட்காமல் சபைக்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேளுங்கள்”. சரீரமாகிய சபைக்குக் காவலாளியாக இருந்து தலையாகிய கிறிஸ்துவைக் கனப்படுத்துவோம். அப்பொழுது அவர் நம்மை கனப்படுத்துவார்.

இயேசுவின் பணியில், K.செல்வின் தங்கதுரை

---

## “மன்னிக்கப்பட்டேன்”

நியூயார்க் நகருக்கு வெளியே உள்ள கல்லறைத் தோட்டத்தில் ஒரு கல்ல றையின் வாசகம் “மன்னிக்கப்பட்டேன்” (Forgiven) என்று மாத்திரம் எழுதப் பட்டிருந்தது. பிறந்த தேதியோ, இறந்த தேதியோ குறிப்பிடப்படவில்லை. பெயரும் “மன்னிக்கப்பட்டேன்” என்பது மட்டுமே இருந்தது. இதைவிட மேன் மையான ஒரு கல்லறை வாசகம் இருக்க முடியுமா? இது இறந்தவரின் நிச்ச யத்தை வெளிப்படுத்துவது மாத்திரமல்ல, இதைக் காண்பவர்களுக்கு இன்றி யமையாத செய்தியாகவுமிருக்கிறது. ●

தகவல்: The Speakers`s Quote Book, Roy B zuck




# கண்ணீரோடே விதைப்போம்

## ஆப்பிரிக்காவில் முன்னணி மிஷனெரித் தம்பதியினர் டேவிட் - ஸ்வீ பிஃளட்

மிஷனெரி வாழ்வில் நெஞ்சைத் தொடும் ஓர் உருக்கமான உண்மைக் நிகழ்வு. மிஷனெரிகள் தங்கள் களப்பணியில் எதிர்கொள்ளும் வேதனைகளையும், இழப்புகளையும் விட ஆண்டவருடைய நோக்கம் மிகப்பெரியதாக இருக்கின்றன. சில வேளைகளில் அவ ருடைய நோக்கத்தை விளங்கிக் கொள்ள முடியாத போது அங்கலாய்ப்புகள் மேற்கொள்ளுகின்றன. ஆனாலும் கிறிஸ்துவுக்கென்று நாம் செய்கிறவைகள் மட்டுமே என்றென்றைக்கும் நிலைநிற்கும். தேவனுடைய இராஜ்ஜியத்திற்கென்று நாம் விதைக்கும் விதைகளே செழித்தோங்கி வளரும்.

1921ஆம் ஆண்டு, சுவீடன் தேசத்தைச் சேர்ந்த மிஷனெரித் தம்பதியினர் டேவிட்-ஸ்வீ பிஃளட் (David and Svea Flood), தங்களது இரண்டு வயது மகனுடன் இப்பொழுது ஜெய்யாரே என்று சொல்லப்படுகிற பெல்ஜியம் காங்கோ என்ற ஆப்பிரிக்க நாட்டிற்கு உறுதியான விசுவாசத்தோடு மிஷனெரிப் பணிக்காகச் சென்றனர். அங்கு எந்த கிராமத்தில் தங்கியிருந்து களப்பணியைத் தொடங்க வேண்டுமென்று திட்டமிட்டிருந்தனரோ அந்தக் கிராமத்தின் தலைவன் ‘‘எங்கள் கிராமத்தில் நாங்கள் வழிபடும் தெய்வங்களை அல்லாமல் வேறு ஒரு தெய்வத்தைப் பிரபல்யப்படுத்த அனுமதிக்க மாட்டோம். நீங்கள் எங்கள் கிராமத்திற்குள் வரக்கூடாது’’ என எதிர்த்து நின்றான். ஆகவே அந்த கிராமத்திற்கு வெளியே ஒரு மைல் தொலைவில் ஒரு மண்குடிசை கட்டி அதில் குடியேறினார்கள். கிராமத்திற்குள் போக முடியாவிட்டாலும் ‘‘ஆண்டவரே, இந்த கிராமத்தில் ஆவிக்குரிய அதிரடி மாற்றத்தை நீர் உண்டாக்கும்’’ (Spiritual breakthrough) என்று தொடர்ந்து ஊக்கமாக ஜெபிக்க ஆரம்பித்தார்கள். அந்த கிராமத்திற்கும் அவர்களுக்குமுள்ள ஒரே ஒரு தொடர்பு ஒரு ஆப்பிரிக்க சிறுபையன் தான். இரண்டு வாரத்திற்கு ஒருமுறை அவர்களது உணவிற் காகக் கோழிக்குஞ்சுகளையும், முட்டைகளையும் (chickens and eggs) கொண்டுவந்து கொடுத்து அதற்கான பணத்தைப் பெற்றுச் செல்வான்.

ஸ்வீ, தனக்கு கிடைத்திருக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கருதி அந்த சிறுபையனை ஆண்டவருக்குள் நடத்தப் பிர யாசப்பட்டு அதில் வெற்றியும் கண்டாள். அச்சிறுவன் ஆண்டவருக்குள் உற்சாக மாக வளர்வதைக் கண்டு மிஷனெரித் தம்பதியினர் மகிழ்ச்சியடைந்தனர்.

அந்த சமயத்தில் ஸ்வீ கருவுற்றிருந்தாள். எந்த மருத்துவ வசதியும் இல்லாத சூழ்நிலையில் அவள் மலேரியாக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்தாள். அவளுக்கு குழந்தையைப் பெற்றெடுக்கும் காலமும் நெருங்கியது. ஓர் அழகான பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அவளுக்கு ஆகி (Aggie) என்று பெயரிட்டனர். குழந்தை பெற்றெடுத்த 17ஆவது நாள் ஸ்வீ மலேரியாக் காய்ச்சலினால் மரணத்தைச் சந்தித்தாள். டேவிட் பேரதிர்ச்சிக்குள்ளானார். குழந்தையின் வளர்ப்பை எண்ணி திகைத்து நின்றார். தனது கையாலேயே குழியைத் தோண்டி தனது 27வயது மனைவியைப் புதைத்தார். எல்லா வற்றையும் இழந்து தனிமைப்படுத்தப்பட்டதுபோல உணர்ந்து மனமுடைந்து கண் கலங்கினார். தனக்கும் ஆண்டவருக்கும் உள்ள தொடர்பு துண்டிக்கப் பட்டுவிட்டதோ என்று மனங்கலங்கினார்.

மகனைக் கையில் பிடித்துக்கொண்டு மகள் ஆகியை மார்போடு அணைத்துக் கொண்டு ஆப்பிரிக்காவிலுள்ள மிஷனெரி மையத்திற்குச் சென்றார். ‘‘நான் சுவீடன் நாட்டிற்குச் செல்ல தீர்மானித்துவிட்டேன். என் மனைவியை இழந்து விட்டேன். இந்த இரண்டு சிறுபிள்ளைகளோடு என் னால் இந்த ஊழியத்தைச் செய்யமுடியாது. ஆண்டவர் என் வாழ்க்கையை நாசமாக்கிவிட்டார்’’ என்ற விரக்தியோடு பேசினார். அங்கிருந்த அமெரிக்கத் தம்பதியினர் சிறிய மகள் ஆகியைத் தங்களது வளர்ப்பு மகளாக ஏற்றுக் கொண் டனர். ஆகிக்கு ஒரு புகலிடம் கிடைத்துவிட்டது என்ற திருப்தியோடு டேவிட் தன் மகனை மட்டும் அழைத்துக் கொண்டு சொந்த நாட்டிற்குத் திரும்பினார்.

ஆகியை வளர்ப்பு மகளாக ஏற்றுக்கொண்ட அமெரிக்க மிஷனெரித் தம்பதியினர் இருவரும் கொடிய காய்ச்சலினால் 8 மாதத்திற்குள்ளாக அடுத்து அடுத்து மரித்துப் போனார்கள். ஆகியை மற்றுமொரு அமெரிக்க மிஷனெரி வளர்க்கும் பொறுப்பை எடுத்துக்கொண்டார். அவர் குறுகிய காலத்திற்குள்ளாக அமெரிக்காவுக்குச் சபை ஊழியம் செய்யும் திட்டத்தோடு (Pastoral Ministry) திரும்பினார். அப்பொழுது ஆகிக்கு வயது 3. ஆகி வளர்ந்து பெரியவளானாள். ஆகியின் தேவபக்தியையும் தேவனுக்கென்று ஊழியம் செய்யவேண்டும் என்ற ஆழ்ந்த விருப்பத்தையும் கண்ட அவளது வளர்ப்புத் தந்தை மினேபோலிஸ் என்ற இடத்திலுள்ள வேதாகமக் கல்லூரியில் அவளைப் படிக்க வைத்தார். அங்கு தன்னோடு பயின்ற டியூ ஹர்ஸ்ட் (Dewey Hurst) தன்னைப் போலவே ஊழிய வாஞ்சையுள்ளவராக இருப்பதைக் கண்டு அவரைத் திருமணம் செய்து கொண்டாள். இருவரும் பயனுள்ள வகையில் ஊழியம் செய்தனர்.

ஆண்டுகள் கடந்து சென்றன. ஒருநாள் அவர்களது தபால் பெட்டியில் சுவீடன் நாட்டு மாத இதழ் ஒன்று போடப்பட்டிருப்பதைக் கண்டு அதைப் படிப்பதற்காக எடுத்துப் புரட்டிக் கொண்டிருந்தாள். ஒரு கல்லறையில்

பளிச்சென்று பிரகாசிக்கும் வெள்ளைச் சிலுவையில் ‘‘ஸ்வீ பிஃளட் (SVEA FLOOD) என்று எழுதப்பட்டிருப்பதைக் கண்டு வியப்படைந்தாள். அதிலுள்ள செய்தியைக் கவனமாகப் படித்தாள். அது பல ஆண்டுகளுக்கு முன்பாக ஆப்பிரிக்காவில் ஊழியம் செய்த சுவிடன் மிஷனெரித் தம்பதியினரைக் குறித்த செய்தி. அங்கு வெளிப்படையாகச் சென்று மிஷனெரிப்பணி செய்ய முடியாத நெருக்கடியான காலக்கட்டத்திலும் ஒரு மண் குடிசையில் தங்கியிருந்து ஊக்கமாக ஜெபித்ததின் காரணமாக ஸ்வீ பிஃளட் எப்படி ஓர் ஆப்பிரிக்கச் சிறுவனை ஆண்டவருக்குள் வழிநடத்தினாள் என்றும், அவளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்த 17ஆவது நாளில் மலேரியாக் காய்ச்சலினால் இறந்தாள் என்றும், அந்த சிறுவன் பெரியவன் ஆனபோது அந்த கிராமத்தலைவரின் அனுமதியோடு ஒரு பள்ளிக்கூடத்தை ஆரம்பித்து, மாணவர்களுக்குக் கல்வி புகட்டி அநேக மாணவர்களை கிறிஸ்துவுக்குள் வழிநடத்தி, அந்தக் கிராமத் தலைவரும் ஆண்டவரை ஏற்றுக்கொண்டு, அங்கு ஓர் ஆலயத்தையும் கட்டி எழுப்பி, அந்த ஆலயத்தில் 600பேர் தற்போது இயேசுவை ஆராதிக்கின்றனர் என்றும் டேவிட்-ஸ்வீ பிஃளட் தம்பதியினர் ஓர் ஆப்பிரிக்கச் சிறுவனுக்குக் கண்ணீரோடு விதைத்த இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் காலங்கள் கடந்தாலும் மிகுந்த கனிகளைக் கொடுத்த காரியம் என்று அதில் எழுதப் பட்டிருந்தது.

ஆகி பெரியவளானபோது தன் பிறப்பையும், வளர்ப்பையும் குறித்து அறிந்திருந்தபடியால் ஸ்வீடன் நாட்டிற்கு அவளது தகப்பன் டேவிட்டைக் காணவேண்டும் என்ற வாஞ்சையோடு ஸ்வீடன் சென்று மிகுந்த சிரமம் எடுத்து விசாரித்து தன் தகப்பன் வீட்டைக் கண்டுபிடித்தாள். அவர் 77 வயதை எட்டி முதிர்ந்தவராக குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டவராக, நரம்புத் தளர்ச்சி நோயாளியாக இருந்தார். ஓர் அழுக்கான படுக்கை. எனினும் தன் தகப்பனைக் காண்கிறோம் என்ற மகிழ்ச்சியில் ‘‘பப்பா...’’ என்று பாசத்தோடு அவரது கைகளைப் பற்றிக்கொண்டாள். தன்னைக்குறித்து சுருக்கமாகச் சொன்னாள். டேவிட் தன்னை அடக்கிக்கொள்ள முடியாமல் சத்தமிட்டு அழுதார். ‘‘நான் உன்னைப் பார்ப்பேன் என்று நினைக்கவே இல்லை’’ என்று தொடர்ந்து அழுதார். ‘‘பப்பா, கர்த்தர் என்னை அருமையாய் நடத்தி யிருக்கிறார்’’ என்று சொன்னவுடன் ‘‘ஆண்டவர் என்னை மறந்து விட்டார். மகளே, நான் எல்லாவற்றையும் இழந்துவிட்டேன்’’ என்று சுவர் பக்கமாகத் திரும்பி அழுதார். ஆகி, அவரது முகத்தை அன்போடு தடவி கண்ணீரைத் துடைத்து ‘‘பப்பா, இப்பொழுது நான் சொல்லுகிறதை நீங்கள் கேட்டால் நீங்கள் துக்கப்படமாட்டீர்கள். ஆண்டவரை பழித்துப் பேசமாட்டீர்கள்’’ என்று சொல்லி அவரது கவனத்தைத் தன் பக்கம் திருப்பினாள். ‘‘பப்பா, நீங்கள் ஆப்பி ரிக்கா சென்றது வீண் போகவில்லை. அம்மா மரித்ததும் வீண்போகவில்லை. நீங்களும் அம்மாவும் ஓர் ஆப்பிரிக்கச் சிறுவனை ஆண்டவருக்குள் நடத்தி

னீர்களே, அவன் இப்பொழுது முழுகிராமத்தையும் ஆண்டவருக்குள் நடத்தி 600 ஆப்பிரிக்க மக்கள் கொண்ட ஒரு சபையை நடத்திவருகிறான். இதெல்லாம் உங்கள் உண்மையான ஊழியத்தின் பலனால்தானே. ஆண்டவர் உங்களைக் கைவிடவில்லையே. அவர் உங்களை வெறுக்க வில்லையே. உங்களை நேசிக்கிறார்'' என்று சொன்னதைக் கேட்டு தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். ஆகியும் அவளது கணவரும் சிலநாட்கள் அவரோடு தங்கியிருந்து அமெரிக்கா திரும்பினார்கள். சில மாதங்களுக்குள்ளாக டேவிட் மரணமடைந்தார்.

சில ஆண்டுகளுக்குப் பின்னர் இலண்டனில் நடந்த ஒரு சுவிசேஷக் கருத் தரங்கிற்கு ஆகியும், அவளது கணவரும் அழைக்கப்பட்டிருந்தனர். ஜெய்யாரே நாட்டின் சுவிசேஷ ஊழிய அறிக்கை வாசிக்கப்பட்டபோது அங்கு தற்போது 1,10,000 திருமுழுக்குப் பெற்ற விசுவாசிகள் இருக்கின்றனர் என்றும், எப்படி கிறிஸ்தவம் தங்கள் நாட்டிற்கு வந்தது என்ற வரலாற்றைச் சொல்லும்போது, ஸ்வீடன் தம்பதியினர் டேவிட்-ஸ்வீ பிஃளட் இவர்களைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். கூட்டம் முடிந்த பின் அறிக்கையை வாசித்தவரை ஆகியும், அவளது கணவரும் சந்தித்துப் பேசினார்கள். அவர் பிரெஞ்ச் மொழியில் பேசியபடியால் மொழிபெயர்ப்பாளர் உதவியுடன் பேசினார்கள். ''எங்கள் நாட்டிற்கு வந்த மிஷனெரித் தம்பதியினர் அதிலும் குறிப்பாக ஸ்வீ பிஃளட் அம்மையாரால் தான் நான் இயேசுகிறிஸ்துவை அறிந்து அவரை அண்டிக் கொண்டேன். நான் சிறுவனாக இருந்த பொழுது, அவர்கள் குடியிருந்த குடிசைக்குச் சென்று உணவுப் பொருட்களைக் கொடுத்து வருவேன். இப்பொழுது ஆண்டவரின் ஊழியக்காரனாக மாறியிருக்கிறேன்'' என்று சொன்னார். தன் தாயார் மூலமாக இரட்சிக்கப்பட்ட அந்த ஒரே சிறுவனை கண்டுகொள்ளக் கிடைத்த வாய்ப்பை நினைத்து மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான். ஆகி, ஸ்வீ பிஃளட்டின் மகள் என்று அந்த ஊழியர் அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். அவர் ஆகி தம்பதியினரைத் தங்கள் நாட்டிற்கு வர அழைப்பு கொடுத்தார். அவர்களும் அழைப்பை ஏற்று ஜெய்யாரே சென்றனர். ஆகி தம்பதியினருக்கு அந்த கிராமத்தினர் பெரிய வரவேற்பளித்தனர். ஆகியும் அவளது கணவரும் ஸ்வீ பிஃளட்டின் கல்லறையைச் சென்று பார்வையிட்டு மரியாதை செலுத்தினர். அந்த ஆலயத்தில் நடந்த ஆராதனையில் கலந்து கொண்டனர். போதகர் யோவா.12:24இல் சொல்லப்பட்ட **“கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித் திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்”** என்ற வசனத்தின் அடிப்படையில் பிரசங்கித்தார். விதைக்கப்படும் ஜீவனுள்ள இயேசு கிறிஸ்துவின் வார்த்தையாகிய வித்துக்கு அழிவில்லை. அது ஒருநாள் முளைத்தெழும்பும். பலன் தரும். **“கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம் பீரத்தோடே அறுப்பார்கள்”** (சங்.126:5). ஸ்வீ பிஃளட் விதைத்த வார்த்தையாகிய விதையும்,

**- தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க..**

## என்னைத் தொழுதுகொள்ளுங்கள்

ரோமப் பேரரசர்களிலேயே டொமிஷியன் (Domitian) என்ற பேரரசன் தன்னைத் தெய்வீகமானவன் என்றும் தன்னை அனைவரும் ஆண்டவராகிய கடவுள் (God, the Lord) என தெய்வீக மதிப்பளிக்க வேண்டும் என்றும் சட்டப் பூர்வமாக ஆணை பிறப்பித்தான். மேலும் தன்னை "இந்த பூமியின் ஆண்டவன்", "எவராலும் வெல்ல முடியாதவன்", "மகிமை", "பரிசுத்தம்", "நீர் ஒருவரே" என்பன போன்ற அடைமொழிச் சொற்களால் தன்னைப் புகழ வேண்டும் எனவும் யாவரையும் வற்புறுத்தினான். ரோம தெய்வங்களைப் போல தன்னையும் பேரரசுக் கடவுளாக (Emperor - God) வழிபட வேண்டு மென்றான். தற்பெருமை பிடித்த அவன், மக்கள் தன்னை கடவுளாக வழிபட வேண்டுமென்பதற்காக தன் உருவத்தைத் தங்கத்திலும், வெள்ளியிலும் வடிவமைத்து தலைநகரில் நிறுத்தினான். கி.பி.93இல் டொமிஷியன் தன்னுடைய உருவச்சிலைக்கு முன்பாக பலியிட மறுத்த கிறிஸ்தவர்களைப் படுகொலை செய்தான்.

தான் ஒரு பேரரசன் என்ற ஆணவத்தில், ரோம ஆட்சி மன்றக்குழுவை (Senate) வெறுத்தான். வரம்பு மீறிய அதிகாரத்தை விரும்பினான். ரோம ஆட்சி மன்றக்குழு உறுப்பினர்களில் (Roman Senators) சிலரைக் கொலை செய்தான். சிலரைக் கொடுமைப்படுத்தினான். சிலரது சொத்துக்களைப் பறிமுதல் செய்தான். மேலும் முன்னாள் உயர் அதிகாரிகளில் (Former Consul) சுமார் பன்னிரெண்டு பேரை படுகொலை செய்தான். ●

**தகவல்:** "இரத்த சாட்சிகள்" - K.ஜஸ்டஸ்

## நம் ஆண்டவர் பெரியவரா?...

ஒருமுறை தேவஊழியர் D.L.மூடி ஒரு ஞாயிறு பள்ளிக்குச் சென்றார். அங்கே சிறுவர்கள் அருமையாகப் பாடிக் கொண்டிருந்ததைக் கேட்டு மிகவும் மகிழ்ந்தார். அவர்களிடத்தில் ஒரு கேள்வி கேட்டார். "நம்முடைய ஆண்டவர் பெரியவரா அல்லது சிறியவரா?" (Is our God great or small). ஒரே ஒரு சிறுவனைத் தவிர மற்ற அனைவரும் கைகளை உயர்த்தி உற்சாகமாக, நம் ஆண்டவர் பெரியவர் எனக் கூறினார்கள். அந்த சிறுவன் அமைதியாக இருந் தான். D.L. மூடி அந்த சிறுவனிடம் உன் பதில் என்ன என்று கேட்டார். அதற்கு அந்தச் சிறுவன் "அவர் பெரியவர் என்று உறுதியாகத் தெரியும். ஆனாலும் என் இதயத்தில் வாழுமளவிற்கு "அவர் மிகவும் சிறியவர்" என்று கூறினான் (I am quiet sure He is great but He is so small that He lives in my heart).

இந்தப் பதில் D.L. மூடி அவர்களுக்கு மிகவும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. "நான் பல இடங்களில் தேவனுடைய வார்த்தைகளை பிரசங்கித்திருந்தும், இந்த உண்மையை இதுவரை புரியாமலிருந்தேன். ஒரு சிறுவனைக் கொண்டு எனக்குக் கற்பித்திருக்கிறார்" என்று மகிழ்ச்சிரோடு சொன்னாராம்.

**நன்றி:** "வாழ்வில் வார்த்தை" நவ - டிச 2019 ●

# கிறிஸ்தியானின் மோட்சப்பிரயாணம்

- பாகம் 7

அலங்கார மாளிகையிலிருந்த நான்கு சகோதரிகள் கடைசியாகக் கிறிஸ்தியானை ஆயுதசாலைக்கு அழைத்துச் சென்று தற்காப்பு ஆயுதங்களையும், தாக்கும் ஆயுதங் களையும் காட்டினார்கள். அவைகள் கிறிஸ்தியானின் பயணத்திற்கு அவசியம் என்பதை வலியுறுத் தினார்கள். அவன் அந்த ஆயுதங் களை எடுத்து அணிந்து கொண்டான். அந்த ஆயுதங்கள் ஒவ்வொன்றும் ஆவிக்குரிய அர்த்தமுள்ளவைகள். இப்பொழுது கிறிஸ்தியான் தாழ் மையின் பள்ளத்தாக்கைக் கடந்து செல்ல பயணத்தைத் தொடர வேண்டும் என்பதைக் குறித்து கடந்த இதழில் (ஜன.2020) கண்டோம்.

## கிறிஸ்தியானும், அப்பொல்லி யோனும்

தாழ்மையின் பள்ளத்தாக்கைக் கடந்து சென்று கொண்டிருக்கும் போது அப்பொல்லியோன் (Apo liyon) எனும் பெயருள்ள மிகப் பெரிய வலுசர்ப்பம் போன்ற உரு வத்தைக் கிறிஸ்தியான் எதிர் கொண் டான். அதைப் பார்க்கவே மிகப் பயங்கரமாக இருந்தது. அது ஒரு பயங்கர பிசாசு, கிறிஸ்தியானை வழிமறித்து அப்பொல்லியோன் பேச ஆரம்பித்தான். நீ யார்? எங்கிருந்து வருகிறாய்? எங்கே போகிறாய்? என்று கேள்விக்களைத் தொடுத்தது. எனினும் கிறிஸ்தியான் சுருக்கமாக "நான் அழிநகரத்திலிருந்து, பரலோக நகரை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறேன்" என்றான். "அப்படியானால் நீ அழிநகரத்தின் பிரஜை நீ எனக்குரியவன். நீ எனக்கு துரோகம் செய்துவிட்டு வெளியேறு வதை நான் அனுமதிக்கமாட்டேன்" என்றான். அதற்குக் கிறிஸ்தியான் **"அழிநகரத்தில் நான் பிறந்து வளர்ந்தது உண்மைதான். ஆனால் "பாவத்தின் சம்பளம் மரணம்" என்றும் இந்த நகரம் அழிவுக்கு வைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அறிந்துகொண்டேன். அழிவில்லாத நித்திய நகரத்தைக் குறித்து என்று அறிந்தேனோ அந்த நகரத்தைச் சென்றடையவேண்டும் என்ற தீர் மானத்தோடு பயணித்துக் கொண்டிருக்கிறேன்"** என்று உறுதி யாகப் பதிலளித்தான். அப்பொல்லி யோன் அவனது உறுதியைக் கண்டு "நீ வாழ்ந்த நகருக்குத் திரும்பு. இப்பொழுது அது முற்றிலும் வித்தி யாசமான நகரம். நீ விரும்புகிற மேலான பிரதிபலனைப் பெற்றுக் கொள்ளலாம். அதை நான் உனக்கு வாக்குத்தத்தம் செய்கிறேன்" என்று கனிவோடு பேசிப் பார்த்தான். கிறிஸ்தி யான் அவன் வாக்குறுதியைக் கேட்டு மாறிவிடவில்லை. உறுதியாக இருந் தான். மேலும் "நான் பரலோக நகரத்தின் இராஜாவுக்கு உண்மை யுள்ளவனாயிருப்பேன் என்று வாக்க ளித்துப் பயணித்துக் கொண்டு

இருக்கிறேன். நீ கூறும் எந்த மேன்மையான காரியமும் என்னை மாற்றமுடியாது'' என்றான்.

கிறிஸ்தியானின் தீர்க்கமான பதில் அப்பொல்லியோனை மூர்க்க கோபமடையச் செய்தது. எனினும் மேலும் கிறிஸ்தியானோடு பேசினான். முதலாவது நீ சார்ந்திருந்த நகரத்திற்குத் துரோகம் செய்துவிட்டுச் செல்லுகிறாய், இரண்டாவதாக நீ அவநம்பிக்கை எனும் குட்டையில் (Slough of Despond) விழுந்தவன், மூன்றாவதாக உன்னுடைய பாவச்சுமையிலிருந்து விடுதலை பெற குறுக்கு வழியில் உன்னுடைய சுயமுயற்சியைப் பயன்படுத்தியவன். நான்காவதாக உனக்குக் கொடுக்கப்பட்ட வேதச்சுருளை (Scroll) உனது கவலையீனத்தால் வழியில் தொலைத்தவன்'' என்று குற்றச்சாட்டுகளை பட்டியலிட்டுக் காட்டி ''இத்தனைக் குற்றச்சாட்டுகளோடு நீ பரலோக நகருக்குள் போக முடியாது'' என்று உறுதியாகக் கூறினான். கிறிஸ்தியான் குற்றச்சாட்டுகளைக் கேட்டு சோர்ந்து போய் விடவில்லை. **''அந்தப் பரலோக இராஜா என்னுடைய அனைத்து தவறுகளையும் பாவங்களையும் மன்னித்துவிட்டார். மன்னித்த பாவங்களை அவர் நினைப்பதில்லை''** என்று கிறிஸ்தியான் பதிலளித்தான்.

அப்பொழுது அப்பொல்லியோன் தனது யுக்தியை மாற்றி பயமுறுத்த ஆரம்பித்தான். இந்த இடத்தைத் தாண்டி உன் பயணத்தைத் தொடர முடியாது என் அச்சுறுத்தினான். ''நான் இராஜபாதையில் (King's High way) செல்லுகிறேன். அது பரிசுத்தத்தின் பாதை (Way of Holiness) ஆகவே எதுவும் என்னைச் சேதப்படுத்த முடியாது'' என்று கிறிஸ்தியான் பதிலளித்தான்.

அப்பொல்லியோன் கிறிஸ்தியான் மீது அக்கினியாஸ்திரங்களை (Fiery darts) எய்ய ஆரம்பித்தான். கிறிஸ்தியான் விசுவாசமெனும் கேடகத்தைக் கொண்டு தன்னைக் காத்துக் கொண்டான். தலையிலும், கையிலும், கால்களிலும் பலத்த காயங்கள் உண்டாயிற்று. எனினும் மிகுந்த தைரியத்தோடு போராடினான். அரை நாள் வரை இந்தப்போர் நீடித்தது. கிறிஸ்தியான் பலவீனமடைந்தான். அப்பொல்லியோன் கிறிஸ்தியானைக் கீழே தள்ளி அவனது பட்டயத்தால் வெட்ட எத்தனித்தபோது அப்பட்டயம் அவன் கையை விட்டுத்தவறி விழுந்து விட்டது. கிறிஸ்தியான் தன் கையை நீட்டிப் பட்டயத்தைத் தன் கையில் எடுத்துக் கொண்டான். ''என் சத்துருவே, எனக்கு விரோதமாய் சந்தோஷப் படாதே; நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன்'' (1) என்று சவால்விட்டு பட்டயத்தால் அவனைப் பலங்கொண்டு வெட்டினான். அவன் அந்த காயத்தோடு செட்டைகளடித்துப் பறந்து சென்றுவிட்டான். கிறிஸ்தியான் ஆச்சரியமாகப் பேராபத்திலிருந்து தப்பினான்.

நீண்டநேரம் போராடினதினாலும் பலத்த காயங்களினாலும் கிறிஸ்தியான் மிகவும் களைத்துப் போனான். தேற்றும் கரம் ஒன்று வந்து ஒரு மரத்தின் இலைகளைக் கொண்டு காயங்களைக் கட்டியது. அவைகள் உடனே சுகமாயின. அவன் எழுந்து உட்கார்ந்து அலங்கார மாளிகையில் சகோதரிகள் கொடுத்த அப்பத்தையும், திராட்சரசத்தையும் உண்டு பெலப்பட்டான். கிறிஸ்தியான் உருவிய பட்டயத்தோடே தாழ்மையின் பள்ளத்தாக்கைத் தாண்டி அதன் எல்லைக்கு வந்தான். ஆனால் தனக்கு முன்பாக உள்ளதைக் கண்ட போது அது "மரண இருளின் பள்ளத்தாக்கு" (Valley of the shadow of Death) என்று கண்டான். கிறிஸ்தியான் அந்த பள்ளத்தாக்கில் காலடி வைத்தான்.

## நாம் கற்றுக்கொள்வது

கிறிஸ்தியான் இரட்சிக்கப்பட்டவன். இரட்சிக்கப்பட்டபின் கிறிஸ்தியான், தேவனுடைய ஆவியினாலும், அவருடைய வார்த்தையினாலும் வழிநடத்தப்படுகிறான். இரட்சிப்பின் அனுபவத்தோடு அழிவுக்குள்ள உலகத்தை விட்டு வெளியேறும்போது நம்முடைய விசுவாசம் சோதிக்கப்படுகிறது. அப்பொல்லியோன் தன்னுடைய வஞ்சனையால் ஈர்த்து கிறிஸ்தியானை மீண்டும் அழி நகரத்தின் சிற்றின்ப வாழ்வுக்கு கொண்டு செல்ல முயற்சித்தும் அவன் சற்றும் திரும்பிப் பார்க்காமல் அவன் பார்வை முன்னோக்கியே இருந்தது. அப்பொல்லியோன் கிறிஸ்தியானின் பாவங்களையும், விழுதல்களையும் பட்டியலிட்டுக் காட்டி கிறிஸ்தியான் பரலோக வாழ்வுக்குத் தகுதியற்றவன் என்று சுட்டிக்காட்டினாலும் தான் பெற்றுக் கொண்ட மன்னிப்பில் நிச்சயமுள்ளவனாயிருந்தான். இதுதான் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய முக்கியமான பாடமாயிருக்கிறது. அநேகர் தாங்கள் பெற்ற பாவமன்னிப்பின் நிச்சயமில்லாமையால் பின்வாங்கிச் சென்று விடுகின்றனர். இதில் நாம் மிகக் கவனமுள்ளவராகயிருக்க வேண்டும்.

கிறிஸ்தியான் ஓர் அக்கினி யுத்தக் களத்தைச் சந்திக்க வேண்டியதிருந்தது. தேவனுடைய ஆவிக்குரிய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொண்டோமானால் அவற்றைக் கொண்டு சாத்தானை மேற்கொள்ள முடியும். (2) ஏனெனில் கிறிஸ்தியான் தன்னிடமிருந்த தற்காப்பு ஆயுதங்களையும், தாக்கும் ஆயுதங்களையும் செம்மையாகப் பயன்படுத்தினான். கிறிஸ்தியான் அப்பொல்லியோனை மேற்கொண்டான். தேவனுடைய வார்த்தையினால் தீமையை மேற்கொண்டு நிச்சயமான வெற்றியைத் தரும் என்பதே உண்மை. ●

(1) மீகா.7:8, (2) எபே.6:13-18)

- தொடரும்

சகோதரி. லாரா டெலனோ
lauradelano@yahoo.com

# உயர் நீதிமன்றத் தீர்ப்பு

**வீட்டில் நடக்கும் ஜெபக்கூடுகைகளைத் தடைசெய்யாதிருங்கள். அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் அரசியல் சாசன உரிமைகளைப் பறிக்காதிருங்கள். அவர்களுடைய உரிமைகள் காக்கப்பட பாதுகாப்பு கொடுங்கள்.**

C.மரிய கோகிலா ஃபுளோரா, நெல்லை மாவட்டம் மூன்றடைப்பு அருகில் உள்ள நேஷனல் கல்லூரி ரோட்டிலுள்ள கதவு இலக்கம் 3/322ல் தனது சொந்த வீட்டில் குடியிருந்து வருகிறார். அவரது வீட்டிலேயே உள்ள ஹாலில் கடந்த சுமார் 7 ஆண்டுகளாக அவரது உறவினர்கள், மற்றும் சில நண்பர்கள் கூடியாருக்கும் தொந்தரவு இல்லாத வகையில் ஜெபம் செய்து வருகின்றனர்.

யாரோ சிலர், இவர்கள் ஜெபம் நடத்துவதால் சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்படுகிறது என்று நாங்குனேரி தாலுகா காவல்துறை ஆய்வாளரிடம் புகார் செய்துள்ளனர். ஆய்வாளர் மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களுக்குக் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் மனுதார் (Petitioner), வீட்டில் ஜெபம் நடத்தக் கூடாது என்று நெல்லை மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் ஆணை பிறப்பித்தார். பாதிக்கப்பட்ட மனுதார் மதுரை உயர் நீதிமன்றத்தில் நீதிகேட்டு மனு கொடுத்தார்.

**மதுரை உயர் நீதிமன்ற நீதிபதி A.D.ஜெகதீஷ் சந்திரா**, இவ்வழக்கை W.P எண் 2361/2019இல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டார். மனுதார் தரப்பில் திரு.K.சாமிதுரையும், எதிர்மனுதாா்கள் (Counter Petitioner) தரப்பில் அரசு வழக்கறிஞர் திருமதி.பாரதியும் ஆஜராகி தங்கள் தரப்பு வாதத்தை எடுத்துரைத்தனர். இருதரப்பு வாதத்தையும் கேட்டு 13.12.2019இல் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்தார். "வீடுகளில் கூடி ஜெபிப்பதற்கு முன் அனுமதி வாங்க வேண்டியதில்லை. அதைத் தடை செய்யக்கூடாது. அது அவர்களுக்குரிய அரசியல் சாசன உரிமை. அவர்களது உரிமை பாதிக்கப்படாமல் காப்பதும் அதிகாரிகளுடைய கடமையாகும். இது தொடர்பாக முன்பாக இதுபோன்ற பல தீர்ப்புகள் சொல்லப்பட்டுள்ளன. ஒலிபெருக்கி வைத்து தொல்லைகள் கொடுப்பார்களானால் அதற்குத் தக்கதான நடவடிக்கை எடுக்கலாம்" என்று தீர்ப்பளித்தார். தீர்ப்பின் நகல் நெல்லை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், நாங்குனேரி தாலுகா தாசில்தார், நாங்குனேரி தாலுகா காவல் ஆய்வாளர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இத்தீர்ப்பின் நகல் வேண்டுவோர் தொலைபேசி 98421 43523ல்/ email id:**wocmdu@gmail.com** எங்களோடு தொடர்பு கொள்ளலாம். ●

**9ம் பக்கத் தொடர்ச்சி...**

இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தில் அவளே ஒரு வித்தாக விதைக்கப்பட்டதும் இன்று பலுகிப் பெருகி செழித்தோங்கியிருக்கிறது. ஆகவே கண்ணீரோடு நாம் வார்த்தையாகிய வித்தை விதைப்போமானால் நாம் சோர்ந்து போக வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் முளைக்கச் செய்கிறவரும், விளையச் செய்கிறவரும் ஆண்டவர் அவரே.**தகவல்:** www.twralumnl.org /Adf/david - sveaflood.pdf ●

# யார் என் நுகத்தடியை முறித்து விடுவிக்க முடியும்?

**- பாகம் 2**

யாக்கோபு, பெயர்செபாவில் தன் பெற்றோரோடு வாழ்ந்த காலத்தில் அவன் கடந்து சென்ற கடினமான பாதைகளையும், மரண பயத்தையும் கருதி, நுகத்தடி என்று அர்த்தம் கொள்ளும் பதான் அரானுக்கு தன் மாமனாகிய லாபான் வீட்டிற்கு அவனது பாதுகாப்புக்காக அனுப்பப் பட்டான். அங்கு சென்றும் அவன் வாழ்க்கை நுகத்தடியின் கீழ் இருப்பது போன்ற பாடுகளும், ஏமாற்றங்களும் நிறைந்ததாகவே இருந்தது. தன் மனைவியர் மற்றும் மக்களோடு வாழ விரும்பி வெளி யேற நினைத்தாலும் அவனுக்கு விடுதலை கிடைக்கவில்லை. தன் இரு மனைவிகளுக்காக ஏழும், ஏழும் ஆக பதினான்கு ஆண்டுகள் உழைத்தான். இப்பொழுது யாக்கோபு மேலும் 6 ஆண்டுகள் தன்னோ டிருந்து அவன் குடும்பத்திற்காக உழைக்க வேண்டும் என்று லாபான் சொன்னான். மீண்டும் லாபானிடமே கூலிக்கு வேலை செய்கிறவனா கவே இருக்க வேண்டியதிருந்தது. ஆனால் கர்த்தர் அவன் இருதயத்தின் சஞ்சலங்களையும், கலக்கத்தையும் கண்டார். ஏனெனில் லாபான் பல முறை யாக்கோபிற்குரிய சம்பளத்தை மாற்றி அவனை நஷ்டப்படுத் தினான். ஆனாலும் கர்த்தர் அவனை ஆசீர்வதிக்க சித்தம் கொண்டார். கர்த்தரே அவனது நுகத்தடியை முறித்து எவ்வாறு ஆசீர்வதித்தார் என்பதைக் பார்ப்போம்.

கர்த்தர், யாக்கோபின் எண்ண மண்டலத்தை (Thought realm) மாற்றியமைக்க அவனைப் பக்குவப்படுத்தினார். **"அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ அப்படியே அவன் இருக்கிறான்"** (As he thinks in heart so is he) என்று வேதம் சொல்லுகிறதின் அடிப் படையில் அவனை மாற்றினார் (நீதி.23:7). உதாரணமாக ஒருவன் கடனாளியாக இருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். "நான் கடனாளி அல்ல, மற்றவர்களுக்கு கடன் கொடுக்கிறவனாயிருப்பேன்" என்பது அவனது நம்பிக்கை (Hope). ஆனால் நம்பிக்கை என்ற நிலையைத் தாண்டி "நான் மற்ற வர்களுக்கு கடன் கொடுக்கிறவனா யிருக்கிறேன் என்பது **விசுவாசம்** (Faith). அதாவது கொடுக்கிறவனா யிருக்கிறேன் என்ற நிலையை எட்டா மலேயே "கொடுக்கிறவனாயிருக் கிறேன்" என்று விசுவாசிப்பது. **நம்பப்படுகிறதின் உறுதியே விசுவாசம்** என்று (எபி.11:1)ல் வேதம் சொல்லுகிறது. "கர்த்தர் எனக்கு இதைச் செய்வார். செய்யாமற் போனாலும் நான் அவரைவிட்டு பின் வாங்குவதில்லை" என்ற உறுதிதான் கர்த்தர் மேல் வைக்கும் **அன்பு** (Love). அந்த அன்பைத்தான் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ வெளிப்படுத்தினார்கள் (தானி.3: 17,18). **"இப்பொழுது விசுவாசம்,**

**நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது. இவைகளில் அன்பே பெரியது"** (1 கொரி.13: 13) என்று வேதம் சொல்லுகிறது போன்ற இந்த நிலையை எட்ட வேண்டும் என்ற கர்த்தரின் ஆலோசனை யாக்கோபுக்கு மாத்திரமல்ல, பிரச்சனைகளை சந்திக்கிற நமக்கும் அவற்றில் அனுகூலமான தீர்வைப் பெற்றுக் கொள்ள இன்றியமையாத ஆலோசனையாயிருக்கிறது.

### "அவர் ஆலோசனையில் ஆச்சரியமானவர்" (ஏசா. 28:29)

இந்தப் பின்னணியத்தில் யாக்கோபு லாபானிடம் தனக்குத் தர வேண்டிய கூலியைக் குறித்து உறுதிப்படுத்திக் கொண்டான். மந்தையில் புள்ளியும், வரியும் கறுப்புமுள்ள செம்மறியாடுகளையும், வரியும் புள்ளியுமுள்ள வெள்ளாடுகளையும் பிரித்துவிடுகிறேன்; அப்படிப்பட்டவை இனி எனக்கு சம்பளமாகயிருக்கட்டும் (ஆதி.30:32) அதாவது இப்படிப் பட்டவைகளின் பெருக்கம் தனக்குள்ளதாயிருக்கும். அப்படி அல்லாதது லாபானுக்கு உரியதாக இருக்கும் என்பதை உறுதிபடுத்திக் கொண்டான். லாபான் "நீ சொன்ன படி ஆகக்கடவது" (வ.34) என்று ஒப்புக் கொண்டான்.

யாக்கோபு இப்பொழுது கர்த்தர் மேலுள்ள அன்பை செயல்படுத்துகிறான். அவன் பெயர்செபாவிலிருந்து வரும் வழியில் பெத்தேலில் கர்த்தர் அவனுக்கு வாக்களித்தார் அல்லவா. **"நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பி வரப்பண்ணுவேன்; நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னை கைவிடுவதில்லை என்றார்"** (ஆதி.28:15) என்பதையும், லாபான் "உன் நிமித்தம் கர்த்தர் என்னை ஆசீர்வதித்தார்" என்று (ஆதி.30:27)ல் சொன்னதையும் மனதில் கொண்டு லாபானிடம் "நான் வந்தபின் கர்த்தர் உம்மை ஆசீர்வதித்ததினால் அது மிகவும் பெருகியிருக்கிறது" என்ற நிச்சயம் இருந்தது (வ.30). ஆகவே அதே கர்த்தர் என்னையும் ஆசீர்வதிக்க சித்தம் கொண்டவராயிருக்கிறார் என்று அவரது அன்பில் முற்றிலுமாகச் சார்ந்து கொண்டான். நாம் முன்பு கண்டதுபோல இப்பொழுது யாக்கோபின் சிந்தை முற்றிலும் மாற்றம் பெற்றிருக்கிறது. அதே மாற்றங்கள் தான் மேய்க்கும் ஆட்டு மந்தைக்கும் வரவேண்டும் என எதிர்பார்க்கிறான். அதாவது தனக்குக் கூலியாக வரவேண்டுமென அடையாளப்படுத்திய அதே அடையாளத்தோடு குட்டிகள் போட வேண்டும், தனக்குள்ள மந்தை பெருகவேண்டும் என்பதுதான். "ஆடுகள் பொலியும் காலத்திலே நான் கண்ட சொப்பனத்தில் என் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, ஆடுகளோடே பொலியும் கடாக்கள் கலப்பு நிறமும் புள்ளியும் வரியும் உள்ளவை

களாயிருக்கக் கண்டேன்" என்று தான் சொப்பனத்தில் கண்டதை மனதில் இருத்திக் கொண்டு தனக்குச் சேரவேண்டிய பெருக்கத்தை தனது மனத்திரையில் கண்டான் (ஆதி.31: 10). அவற்றைப் பெற்றுக் கொண்ட தாக விசுவாசித்தது மாத்திரமல்ல, அதற்கான இரண்டு காரியங் களையும் யாக்கோபு செய்தான்.

ஆடுகள் வாய்க்கால்களில் தண்ணீர் தொட்டிகளில் தண்ணீர் குடிக்க வரும்போது அவைகள் இணைவதுண்டு. அப்பொழுது யாக் கோபு பச்சையாயிருக்கிற புன்னை, வாதுமை, அர்மோன் இலைகளின் மரக் கொப்புகளை வெட்டி இடை யிடையே வெண்மை தெரியும்படி அக்கொப்புகளின் வெளிப்பட்டையை உரித்துக் கோடு போல ஆக்கி, குடிக்கும் தண்ணீரில் போட்டு வைப் பான். ஆடுகள் தண்ணீரைப் பார்த்து தண்ணீர் குடிக்கும்போது தண்ணீரில் கிடக்கும் மரக்கட்டையின் நிறமும், பட்டை உரிக்கப்பட்ட வெண்மை வரிகளும் மரக்கட்டையிலுள்ள புள்ளி களும் பிரதிபலித்து ஆட்டின் சரீரத்தின் மேல் அவைகள் இருப்பது போல காட்சியளிக்கும். அந்த ஆடு என் சரீரம் இப்படி இருந்தால் நன்றாக இருக்குமே என்று எண்ணுவதோடு என்னோடு இணையும் கடாவும் இப்படி இருந் தால் எனக்கு பிறக்கும் குட்டிகளும் இப்படி இருந்தால் நன்றாக இருக்குமே என்ற எண்ணத்தைக் கர்த்தர், ஆடுகளின் சிந்தையில் பதிய வைக்கிறார். இந்த எண்ணம் ஆட்டில் செயல்பட ஆரம்பிக்கிறது. அதன் எண்ணத்தின்படியே குட்டிகள் போடுகின்றன. (ஆதி.30:37-39) அப்படி பிறந்த குட்டிகளைத் தனியாக பிரித்து வைத்துக்கொண்டு ஆடுகள் இணையும்போது பிரித்தெடுத்த அந்த ஆடுகளை அவைகளின் முன் பாக நிறுத்திவைப்பான். ஆடுகள் அவற்றைப் பார்க்கும்போது அவற்றைப்போல என் சரீரமும் இருக்கவேண்டும் என்ற எண் ணத்தை வலுப்படுத்துகிறது. அந்த எண்ணங்கள் பதிவாகி எண்ணம் போலவே குட்டிகள் போடுகின்றன. கர்த்தர், யாக்கோபை ஆசீர்வதிக்கும் பொருட்டு ஆட்டின் எண்ணங்களை மாற்றுகிறார். அவன் விரும்பிய சாயலில் பெருக ஆரம்பித்தன. இவ் விதமாக யாக்கோபு விருத்தி யடைந்து திரளான ஆடுகளுக்குச் சொந்தக்காரனானான். 14 ஆண்டு பெற்றிறாததை 6 ஆண்டுகளில் பெரும் பெருக்கத்தைப் பெற்றுக் கொண்டான். கர்த்தர் யாக்கோபின் நுகத்தை நீக்கினார். எந்த மனி தனும் நீக்க முடியாததை கர்த்தரே இரங்கிச் செய்தார். யாக்கோபின் தகப்பன் செய்ய நினையாததை, உடன்பிறந்த சகோதரனாகிய ஏசாவும் விடுவிக்க இயலாததை, யாக்கோபின் மனைவியர் செய்ய நினைக்காததைக் கர்த்தரே செய் தார். "கர்த்தர் ஆலோசனையில் ஆச்சரியமானவர்" இஸ்ரவேல் மக்களைக் குறித்து எரேமியா தீர்க்க தரிசி **"யாக்கோபின் குடும்பத் தாரே, இஸ்ரவேல் குடும்பத்தின் வம்சங்களே, நீங்கள் எல்லாரும்**

**கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்''** (எரே.2:4) **''பூர்வகாலந் துவக்கி நான் உன் நுகத்தடியை முறித்து, உன் கட்டுகளை அறுத்தேன்''** என்பதை எவ்வளவு துல்லியமாகக் குறிப்பிட்டுள்ளார் என்று பாருங்கள் (வ.20).

இப்பொழுது நம்முடைய வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்ப்போம். நீங்கள் வறுமையின் காரணமாக விரக்தியடைந்திருக்கிறீர்களா? ஒடுக்குகிறவர்களால் நெருக்கப்பட்டு நுகத்தின் கடும் அழுத்தத்தோடு இருக்கிறீர்களா? ''கர்த்தருடைய வார்த்தைகளைக் கேளுங்கள்'' கர்த்தருடைய வார்த்தையை கருத்தாய் வாசியுங்கள். அதை அசைவில்லாத தண்ணீரைப் பார்ப்பது போல பாருங்கள். அப்பொழுது அந்த வார்த்தைகள் உண்டாக்கும் பிரதிபலிப்பைக் கருத்தாய் கவனியுங்கள். **நான் இந்த வசனத்தின்படி இருப்பேன் என்று நம்புங்கள். இருக்கிறேன் என்று விசுவாசியுங்கள். உங்கள் விசுவாசத்தின்படியே ஆவீர்கள்.** என் வறுமை நீங்கி ஆசீர்வாதமாக இருக்கிறேன். என் நெருக்கமான சூழ்நிலை மாறி இப்பொழுது ஆசீர்வாதமான சூழ்நிலையாக மாறியிருக்கிறது என்பதை அறிக்கை செய்யுங்கள், ஆகவேதான் இயேசு ''விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்'' என்று சொன்னார் (மாற்.9:23).

நுகத்தடியின் அழுத்தங்கள் நீங்கி சூழ்நிலைகள் அனைத்தும் யாக்கோபுக்கு அனுகூலமாக மாறிற்று. தேவதூதன் சொப்பனத்தில் தோன்றி ''நீ எழுந்து இந்தத் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, உன் இனத்தாரிருக்கிற தேசத்திற்குத் திரும்பிப்போ என்று சொன்னார்'' (ஆதி.31:13). யாக்கோபு அப்படியே செய்தான். அவன் சம்பாதித்த மிருக ஜீவன்களாகிய மந்தைகள், தன் பொருட்கள், மனைவி பிள்ளைகளுமாக புறப்பட்டுச் சென்றான். லாபான் தன் ஆடுகளை மயிர் கத்தரிக்கச் சென்றபோது அவர்கள் போய் விட்டபடியால் அவர்களை மடக்கிக் கொண்டு வர லாபான் தன் சகோதரர்களைக் கூட்டிக் கொண்டு பின் தொடர்ந்தான். ''அன்று ராத்திரி தேவன் சீரியா தேசத்தானாகிய லாபானுக்குச் சொப்பனத்தில் தோன்றி: நீ யாக்கோபோடே நன்மையே அன்றித் தீமை ஒன்றும் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்றார்'' (வ.24). அப்படிப்பட்ட தேவ எச்சரிப்பைப் பெற்றிருந்தபடியால் பிரச்சனைகள் மத்தியிலும் அவர் களுடைய சந்திப்பு சுமூகமாக முடிந்தது. யாக்கோபு ''என் பிதாவின் தேவனாகிய ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் பயபக்திக்குரிய வரும் என்னோடிராமற் போனால், நீர் இப்பொழுது என்னை வெறுமையாய் அனுப்பிவிட்டிருப்பீர்; தேவன் என் சிறுமையையும் என் கைப்பிர யாசத்தையும் பார்த்து, நேற்று ராத்திரி உம்மைக் கடிந்து கொண்டார் என்று சொன்னான்'' (ஆதி.31:42). இருபது வருட காலம் லாபானோடு வாழ்ந்தபோது கர்த்தர் அவனோடிருந்தார். நீங்கள், என்

பிரச்சனைகளுக்கு யார் தீர்வு தர முடியும்? நான் உதவியற்றவனாக நிற்கிறேனே என்று அங்கலாய்க் கிறீர்களோ? யாக்கோபின் சிறுமையைக் கர்த்தர் கண்டு (God has seen my affliction) லாபானை சொப்பனத்தில் எச்சரித்தது போல உங்களுக்கு விரோதமாக எழும்பிய வர்களை எப்படிச் சரிசெய்ய வேண்டுமோ அப்படி செய்து உங்க ளோடு சமாதானமாகச் செய்வார். அதை விசுவாசியுங்கள். அவரை விசுவாசியுங்கள்.

லாபானும் யாக்கோபுடன் 20 ஆண்டுகளில் நடந்த கசப்பான அனுப வங்களை விட்டு ஒருவருக்கொருவர் உடன்படிக்கை செய்து கொண்டனர். ஒரு கற்குவியலை உண்டாக்கி தீங்கு செய்யும் பொருட்டு ஒருவரை யொருவர் இதைத் தாண்டி வரக் கூடாது என உடன்படிக்கை செய் தனர். லாபான் அதற்கு ''ஜெகர் சகதூதா'' என்றும், யாக்கோபு அதற்கு ''கலயெத்'' என்றும் பேரிட்டனர். ''ஜெகர்சகதூதா'' என்ற சீரிய சொல்லுக்கு ''பயத்தின் சாட்சி'' என்றும் ''கலயெத்'' என்ற எபிரெயச் சொல்லுக்கு ''நன்மையான சாட்சி களின் திரள்'' என்றும் அர்த்தம். லாபானும், யாக்கோபும் சமாதானத் தோடு அவரவர் வழியில் திரும்பி னார்கள். **''ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், அவனுடைய சத்துருக்களும் அவ னோடே சமாதானமாகும்படி செய் வார்''** (நீதி.16:7).

யாக்கோபு இப்பொழுது தன் தேசத்தின் எல்லைக்குள் வந்து விட்டான். ''உன் தேசத்துக்கும் உன் இனத்தாரிடத்துக்கும் திரும்பிப்போ, உனக்கு நன்மை செய்வேன் என்று என்னுடனே சொல்லியிருக்கிற கர்த் தாவே, அடியேனுக்கு தேவரீர் காண் பித்த எல்லா தயவுக்கும் எல்லா சத்தியத்துக்கும் நான் எவ்வள வேனும் பாத்திரன் அல்ல, நான் கோலும் கையுமாய் இந்த யோர் தானைக் கடந்துபோனேன்; இப்பொழுது இவ்விரண்டு பரிவாரங் களையும் உடையவனானேன்'' என்று நன்றியின் நிறைவோடு அறிக்கை செய்தான்(ஆதி.32:9,10). ''பரிவாரம்'' என்ற சொல்லுக்கு இராஜாவின் சொத்து என்று அர்த்தம். அப்படியானால் ''இரண்டு பரிவாரம்'' என்றால் இரண்டு இராஜாக்களின் சொத்து என்று அர்த்தம். பெயர்செபா விலிருந்து வெறுங்கையனாக மரணபயத்தோடும் எதிர்காலத்தைக் குறித்து நம்பிக்கையற்ற நிலவரத் தோடும் சென்றவன் இப்பொழுது 2
மனநிறைவோடு திரும்பினான். ''தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப் படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரி யமும் மகிமையும் ஜீவனுமாம்'' (நீதி.22:4). அவர் நுகத்தடியை முறித்து விடுவிப்பவர் மாத்திரமல்ல. அவர் நிறைவாய் ஆசீர்வதிக் கிறவர். யாக்கோபு பெற்றுக்கொண்ட ஆசீர்வாதத்தைப் போல உங்க ளையும் ஆசீர்வதிப்பாராக. ●

- முற்றும்.

**நன்றி:** சகோ.ஜுப்ளின் ஜோசப்
போன்: 8015749129

# நீதியின் விளைச்சலை வர்த்திக்க விரும்புகிறீர்களா?

- பாகம் 2

தேவனுக்கும் ஆலயப்பணிக்கும் கொடுத்தலைக் குறித்து கடந்த இதழில் (ஜன.2020) நாம் கவனித்தோம். தொடர்ந்து அதன் மெய்யான அர்த்தத்தை விளங்கிக் கொள்வோம்.

**5.கொடுப்பதினால் வரும் ஆசீர்வாதங்கள் பற்றி பழைய ஏற்பாடு சொல்வதென்ன?**

நீதி.19:17ல் ''ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான்'' ஆகாய்.1:8ல் ''ஆலயத்தைக் கட்டுங்கள்; அதின் பேரில் நான் பிரியமாயிருப்பேன், அதினால் என் மகிமை விளங்கும்''. மல்.3:10ல் ''என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டகசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்க மாட்டேனோ என்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள்'' 1 இராஜா. 17:16ல் ''பானையிலே மா செலவழிந்துபோகவும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்து போகவும் இல்லை''. இவ்வாறு நிறைய ஆசீர்வாதங்களை நாம் பார்க்கலாம்.

**6.புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய நாம் ஏன் கொடுக்க வேண்டும்?**

நாம் பொதுவாக நமது பழக்க வழக்கங்களை நமது தாய், தகப்பனிடத்தில் தான் கற்றுக் கொள்கிறோம். நமக்கு முதல் ஆசிரியர்கள் நமது தாயும் தகப்பனுமே. தேவன் நமது பரமபிதா - தேவன் முதலாவது கொடுத்தார். ஒரு மனிதன் கிறிஸ்துவுக்கு தன்னை அர்ப்பணிக்கும் போது அவன் கடவுளின் பிள்ளையாகிறான் (யோவா.1:12). எனவே கடவுள் நமது தகப்பன். நாம் இந்த உலகத்தில் வாழ எல்லா கிருபைகளையும் தேவன் தந்திருக்கிறார். நம்மிடத்திலுள்ள அனைத்தும் கர்த்தருக்கே சொந்தம். நமது சுகம், பெலம், கல்வி, ஞானம், தாலந்துகள், கிருபைகள், நமது குடும்பம், வேலை, வருமானம்...இதற்கெல்லாம் தேவனே சொந்தக்காரர். ''பூமியும், அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது'' என வேதம் சொல்கிறது(சங்.24:1). எனவே கர்த்தரைக் கனப்படுத்தும் விதமாய் நாம் அவருக்கு கொடுக்கிறோம். இன்னொரு வகையில் நமது தகப்பன் நமக்கு கொடுத்ததினால், நாமும் திரும்ப அவருக்குக் கொடுக்கிறோம்.

இரண்டாவது, **பாவம் செய்த மனிதனை மீட்க பிதா தன் சொந்த குமாரனையே கொடுத்தார்.** (ரோமர்.5:8). ''நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்'' என்று வாசிக்கிறோம்.

தேவன் இந்த உலகை மட்டுமல்ல... நாம் நரகத்தின் மக்களாய் போய் விடக்கூடாது என்பதற்காக தமது சொந்தக்குமாரனையே நமக்காகக் கொடுத்தார். எனவே நாமும் அவருக்குக் கொடுக்க கடமைப்பட்டிருக் கிறோம்.

**7.நாம் எதைக் கொடுப்போம்? எவ்வளவு கொடுப்போம்? எப்படி கொடுப்போம்?**

பழைய ஏற்பாட்டில், தேவனோடு ஒரு மனிதன் நல்லுறவு கொள்ள வேண்டுமெனில், ஒரு மாட்டை அல்லது ஆட்டை சர்வாங்க தகனபலி யாகச் செலுத்தினால் போதும். ஆனால் புதியஏற்பாட்டில் தேவனோடு நல்லுறவு பொருந்த தேவகுமாரனே சர்வாங்க தகனபலியானார். அப்படி யென்றால் பழைய ஏற்பாட்டு தசம பாகம் மட்டும் அப்படியே மாறாமல் இருக்குமா? மாற்கு.12:41-44 செல்வந்தர்கள் தங்கள் பரிபூரணத்தி லிருந்து எடுத்துப் போட்டார்கள்; ஆனால் ஏழை விதவை வறுமையில் ஜீவனத்துக்கு உள்ளதெல்லாம் கொடுத்தாள். 2 கொரி.8:1-5 மக்கதோனியா சபையினர் தாங்கள் மிகுந்த உபத்திரவத்தில் சோதிக்கப் படுகையில், கொடிய தரித்திரத்தின் மத்தியில், பரிபூரண சந்தோஷத்தோடு மிகுந்த உதாரத்துவமாய் கொடுத் தார்கள். அதற்கு காரணம் அவர்கள் காணிக்கை கொடுக்குமுன் தங் களையே கர்த்தருக்கு ஒப்புவித் தார்கள். எனவே, புதியஏற்பாட்டில் ‘தசமபாகமல்ல‘, ‘சதமபாகம்‘ என்று சொல்ல விரும்புகிறேன். கர்த்தர் நமக்கு கொடுக்கும் 100சதவீத வருமானமும் கர்த்தருடையது. இதில் சந்தோஷமாக, உற்சாகமாக, மன நிறைவுடன் கர்த்தருக்கு நாம் மனதில் நிர்ணயித்ததைக் கொடுக்க வேண்டும். அது எவ்வளவு அல்லது எந்த அளவில் துவக்க வேண்டும் என்று கேட்பீர்கள் என்றால், பழைய ஏற்பாடு நமக்கு போதித்ததின் அடிப் படையில் துவங்கி அதில் வேகமாக வளர்ந்து செல்ல வேண்டும். இது தான் புதிய ஏற்பாட்டு புரிதல்.

**8.எங்கே கொடுக்க வேண்டும்?**

நாம் எங்கிருந்து ஆவிக்குரிய ஆகாரம் பெறுகிறோமோ, எங்கே நம்முடைய ஆவிக்குரிய தேவைகள் சந்திக்கப்படுகிறதோ, எங்கே நமக் காக ஜெபித்து ஆலோசனை சொல்லும் ஊழியர்கள் இருக்கிறார் களோ, எங்கே ஊழியங்களுக்கு பணத்தேவை இருக்கிறதோ, எங்கே ஆண்டவரின் இராஜ்யம் கட்டப்படு கிறதோ, எங்கே கணக்குகள் முறை யாகப் பராமரிக்கப்படுகிறதோ, எங்கே கொடுத்த பணத்திற்குச் செலவு விபரங்கள் சொல்லப்படுகிறதோ, எங்கே நாம் கொடுக்கும் பணம் செலவழிக்கப்படுவதை நம்மால் பார்க்க முடிகிறதோ, எங்கே மிஷனரி தரிசனம் உள்ளதோ, எங்கே மிஷனரிக் களத்தில் பணங்கள் செலவழிக்கப்படுகிறதோ அங்கே கொடுக்க வேண்டும். நம்முடைய தேவன் கணக்கு வைக்கும் தேவன் - அவர் கணக்கும் கேட்பவர்.

**26ஆம் பக்கம் பார்க்க...**

# கிறிஸ்தவ வாழ்வில் பரிசுத்தம்

**கிறிஸ்தவ வாழ்வும் பரிசுத்தமும்**

இவை இரண்டும் பிரிக்க முடியாதவை. ஆவிக்குரிய வாழ்வில் நாம் எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் எல்லாமே ஆண்டவரோடு நெருங்கி உறவாட வேண்டும் என்ற நோக்கில் தானே? ஆனால் எப்படி விசுவாசம் இல்லாமல் தேவனை பிரியபடுத்த முடியாதோ அதுபோல பரிசுத்தம் இல்லாமல் தேவனை தரிசிக்க முடியாது என்பது தான் கடவுளின் வார்த்தைகள் நமக்கு கற்றுத் தரும் பாடம்.

**பரிசுத்தம் என்றால் என்ன?**

சுருங்கக்கூறின் **பரிசுத்தம், பிரித்தெடுக்கப்படுகிற (Setting apart) வாழ்வைக் குறிக்கிறது.** பிரித்தெடுக்கப்படுகிற வாழ்க்கை என்பது கடவுளுக்குப் பிரியமில்லாத காரியங்களிலிருந்தும், பொல்லாப்பாய் தோன்றுகிற யாவற்றிலும் இருந்தும், பாவங்களிலிருந்தும் விலகி வாழ்வதேயாகும். வேறு விதமாகச் சொன்னால் மனிதனை, தேவனுடைய சமுகத்திலிருந்து பிரிக்கக்கூடிய எதுவாயினும் அது பாவமே(Anything that separates man from the presence of God is sin). மேலும் **பரிசுத்தம் என்பது பிரகாசத்தை குறிக்கிறது.** ஏனெனில் அந்தகாரமான எல்லாவற்றிலிருந்தும் ஒருவன் விலகி இருக்கும்போது இயல்பாகவே அவனை ஒளி சூழ்ந்து கொள்கிறது.

**கடவுளின் பரிசுத்தமும் மனிதனின் பரிசுத்தமும்**

கடவுளின் பரிசுத்தம் அவரின் இயல்பான பண்பாகும். அவரிடமிருந்து பிரிக்க முடியாத ஒரு குணாதிசயம் ஆகும். கடவுள் என்றாலே பரிசுத்தம். ஆனால் மனிதனின் பரிசுத்தம் இயல்பானது அல்ல. "என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" (சங்.51:5). நிர்ப்பந்தமான மனுஷன் நான் இதிலிருந்து என்னை விடுவிப்பவர் யார் (ரோம.7:24) போன்ற வசனங்கள் இதை நமக்கு நினைவுபடுத்துகின்றன அல்லவா? ஆனாலும் பரிசுத்தம் மனிதனுக்கு தூரமானதொன்றும் அல்ல. அவன் வாஞ்சையோடு கடவுளை நெருங்கும்போது அவரோடு உறவு கொள்ள மனப்பூர்வமாகப் பிரயாசப்படும்போது தமது சாயலில் படைத்த மனிதனுக்கு தமது பரிசுத்தத்தைக் கொடுத்து ஆசீர்வதிக்கிறவராயிருக்கிறார். ஆம் மனிதனின் பரிசுத்தம் அவனுக்கு உரிய சுபாவம் அல்ல மாறாக கடவுளால் கடவுளிடம் இருந்து வருகிற கொடை.

பரிசுத்தத்தின் பலனாக அல்லது வெளிப்பாடாக வரும் விளைவுகள்: வல்லமை, மகிமை, கடந்து நிற்கும் நிலை (Transcendence), தனித்தன்மை (Uniqueness), பிரத்தியேகத்தன்மை (Exclusiveness), தூய்மை

(Pureness) பரிசுத்தம் என்ற சொல் கடந்து நிற்கும் நிலையை காட்டினாலும் வேதம் நமது ஆண்டவரைக் கடந்து நிற்பவராகச் சித்தரிக்கவில்லை. தம் மக்களின் மத்தியில் வசிப்பவராக, ஓயாமல் இடைப்படுகிறவராக, தம் மக்கள் மத்தியில் உலாவுகிறவராகவே காண்பிக்கிறது. (ஓசியா.11:9) நான் உங்கள் நடுவிலே உள்ள பரிசுத்தர். ஏசா.57:15 பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், உங்களோடு வாசம் பண்ணுகிறேன். இவ்வாறு நம் தேவன் நம் மத்தியில் பரிசுத்தத்தில் செயல்படுகிறார். கடவுளின் பிள்ளைகளுக்கு பரிசுத்தம் என்பது வாழ்வின் பிரிக்க முடியாத பகுதியாக விளங்குகிறது. நம் வேதம் இதைத் தான் கற்பிக்கிறது.

கிறிஸ்தவம் ஒரு மதமல்ல என்பதும் அது கிறிஸ்துவோடு கொள்ளும் உறவை சுட்டிக் காட்டுகிறது என்பதும் நமக்குத் தெரியும். கிறிஸ்தவன் என்றும் பிரதிஷ்டை செய்யப்பட்டவன். கடவுளின் கற்பனைகளுக்கு கீழ்ப்படிந்து அவர் வழியில் நடப்பவன்; அவரின் கிருபையால் அங்கீகரிக்கப்பட்டவன், கடவுளின் பெலப்படுத்தும் பிரசன்னத்தை, அவரின் பரிசுத்தத்தை செயல்பாட்டில் காட்டுபவன், உண்மையான கிறிஸ்தவனிடமிருந்து பிரிக்க முடியாத பண்பு பரிசுத்தம். கிறிஸ்தவனின் வாழ்வும் பரிசுத்தமும் மீனின் வாழ்வும், நீரும் போன்றது. இதை ஏற்றுக் கொள்வோமானால் நான் பரிசுத்தமாய் இருக்கிறேனா? என்கிற வினா எழுகிறது அல்லவா. ஆம், நாம் பரிசுத்தமாய் வாழ்கிறோமா? அல்லது பரிசுத்தமாய் வாழ வேண்டும் என்ற வாஞ்சை நம்மிடம் உண்டா? நாம் பரிசுத்தமாய் வாழ விரும்பியும் பரிசுத்த வாழ்க்கையை வாழ முடியாது தவிர்ப்பதற்கு காரணம் நாம் நாமே நமக்கு ஏற்படுத்திக் கொண்ட சாக்குப் போக்கான சிந்தனைகளே என்பதை பல பரிசுத்தவான்களின் வாழ்க்கை பறைசாற்றுகிறது. அவைகளைப் பற்றி சிந்தித்து செயல்பட இக்கருத்துரை அழைக்கிறது.

## பொய்யான சாக்குப் போக்குகள்:

### 1) பரிசுத்தம் சாத்தியமற்றது

முதலாவது இந்தச் சிந்தனை தேவனுடைய ஞானத்தைக் கேள்விக்குள்ளாக்குகிறது. கடவுள் நம்மைப் படைத்தவர், ஞானமுள்ளவர். நம்மை புரிந்து கொண்டவர். மனிதன் செய்ய முடியாத ஒன்றை அவர் ஒருபோதும் கட்டளையாகக் கொடுப்பதில்லை என்பதை வேதம் பலர் மூலம் உணர்த்துகிறது. நோவா தன் காலத்தில் வாழ்ந்தவர்களுக்குள்ளே நீதிமானும், உத்தமனுமாய் இருந்தான் (ஆதி.6:9). யோபு எல்லார் மத்தியிலும் நீதிமானாய் இருந்தான். ஏனோக்கு

தேவனோடு சஞ்சரித்தான். ஆகை யால் மனிதன் பரிசுத்த வாழ்க் கை வாழ்வது சாத்தியமே.

### 2) பரிசுத்தம் என்பது தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு சிலருக்கு என்று கொடுக்கப்பட்ட வரம்

பரிசுத்தம் எல்லாருக்கும் அமை யாது. இது உண்மையானால் எப்படி பரிசுத்த பவுல், பரி.மத்தேயு, பரி. மாற்கு, பரி.லூக்கா, பரி.பிரான்சிஸ் ஆப் அசிசி என்று ஆயிரமாயிரம் மனிதர்களால் இது எப்படி முடிந்தது? எல்லா கிறிஸ்தவர்களும் பரிசுத்த வான்களாக வேண்டும் என்பதே தேவனுடைய திட்டம். கிறிஸ்து நமக்காக சிலுவையில் சிந்திய இரத்தம் இந்த திட்டத்தை சாத்திய மாக்குகிறது. பரிசுத்த பவுல் ஒவ் வொரு மனிதனும் கிறிஸ்துவுக்குள் பூரணப்பட பாடுபடுகிறேன் என் கிறார். நானும் பரிசுத்தம் பெற வேண்டும் என்கிற ஆசை நம்மிடம் காணப்படுகிறதா? புதிய ஏற்பாட்டுக் காலத்தில் சபை மக்களுக்கு பரிசுத்த வான்கள் என்ற பெயரும் உண்டு என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆகையால் பரிசுத்தம் வாஞ்சிக்கிற எல்லா கிறிஸ்தவர்களுக்கும் சாத்தியமே.

### 3) பரிசுத்தம் ஒருவன் செய்யும் தொழிலைப் பொறுத்ததே

ஊழியக்காரனுக்கு அல்லது போதகருக்கு அது தேவைதான். ஆனால் கட்டிடம் கட்டும் காண்ட்ராக் டருக்கும், இறைச்சிக் கடைக்கார ருக்கும், ஒரு வியாபாரத்தைத் தொழிலாகச் செய்கிறவனுக்கும் பொதுவாக பரிசுத்தம் சாத்தியமா கிறதில்லை. ஆனால் எந்த தொழில் செய்தாலும் அதில் அவன் பரிசுத்தம் உள்ளவனாய் இருப்பதே ஆண்ட வரின் எதிர்பார்ப்பு. நமது ஆண்டவர் ஒரு தச்சனாயிருந்தவர். அவரிடம் பரிசுத்தம் காணப்படவில்லையா? கிறிஸ்தவ வாழ்க்கையில் எங்கும் எதிலும் பரிசுத்தம் என்பதை குதிரை களின் மணிகளில் பரிசுத்தம், ஆலயத்தில் உள்ள பானைகளில் பரிசுத்தம், சமையல் பாத்திரங்களில் பரிசுத்தம் என்கிற வசனங்கள் நமக்கு நினைவுபடுத்துகின்றன (சக.14:20).

### 4)பரிசுத்தம் அவரவர் வாழ்கிற சூழ்நிலையைப் பொறுத்தே அமையும்

இந்த எண்ணம் நம்மில் இருப்ப தால்தான் என் சூழ்நிலையில் இருந் திருந்தால், நீங்களும் இந்த பாவத்தைச் செய்து இருப்பீர்கள் என்று சொல்லி நம்மை சமாதானப்படுத்திக் கொள்ள முயல்கிறோம். இதற்கு வேதம் நம் முன் வைக்கும் கேள்வி- யோசேப்பு கடுமையான பாவம் செய்ய பலவந்தம் பண்ணப்பட்ட சூழ் நிலையிலும் தன்னைக் கர்த்த ருக்குள் காத்துக் கொள்ள வில்லையா? வாலிபனாகிய தானி யேல் தம்முன் ருசிகரமான மாம் சமும் மதுவும் இருந்தும் உண வினால் தன்னைத் தீட்டுப்படுத்திக் கொள்ளாமல் காத்துக் கொள்ள வில்லையா? எல்லா சூழ்நிலை களுக்கும் ஆண்டவராகிய கடவுள்,

ஒருவனோடு இருந்தால் அவனால் முடியாதது என்று ஒன்று உண்டோ! ஒரு கிறிஸ்தவன் எந்தச் சூழ்நிலை யிலும் பரிசுத்தமாய் வாழ முடியும்.

**5) பரிசுத்தம் நம் வாழ்வை மகிழ்ச்சியற்றதாய் மாற்றி விடும்**

பரிசுத்தமாய் இருக்கும்போது எந்த ஆசாபாசங்களில் இருந்தும் விலக வேண்டி இருப்பதால் எப் போதும் நீண்ட முகத்துடன் சந்தோ ஷம் இல்லாமல் இருக்க நேரிடும். ஆனால் இது முற்றிலும் தவறான சிந்தனை. சரியாகச் சொன்னால் பரிசுத்த வாழ்க்கை பரவசமான வாழ்க்கை. பரவசம் எல்லாம் பரிசுத்தமாகாது. ஆனால் பரிசுத்த மான எதுவும் பரவசத்தைத் தரும். ‘‘சுத்தமான கைகளுள்ளவன் மேன் மேலும் பலத்துப் போவான்’’ (யோபு 17:9). பிரகாசத்தின் மேல் பிரகாச மடைவான் (நீதி.4:18). தைரியத் தின் மேல் தைரியமாய் இருப்பான் (நீதி.28:1). பலத்தின் மேல் பலம், பிரகாசத்தின் மேல் பிரகாசம், தைரியத்தின் மேல் தைரியம் எல்லாமே மகிழ்ச்சியின் வெளிப்பாடு தானே. பரிசுத்தம் பரவசத்தை கெடுக்காது பரவசத்தை கொடுக்கும் “Holy person is a jolly person”.

**6)பரிசுத்தம் கடவுளின் செயல். நாம் என்ன செய்ய முடியும்?**

நாம் பரிசுத்தமாய் இருந்தால் அதற்கு கடவுள் தான் காரணம். நாம் பரிசுத்தம் இல்லாமல் இருந்தாலும் அதற்கும் கடவுள்தான் காரணம் என்று சொல்ல முற்படுகிறோம். ஆனால் வேதம் என்ன சொல்கிறது? ஏசா.52: 2ல் ‘‘தூசியை உதறிவிட்டு எழுந்திரு’’. ஓசி.10:12ன் படி கர்த்தர் உங்கள் மேல் நீதியை வர்த்திக்கப் பண்ணு மட்டும் நீதிக்கு ஒத்ததாய் விதை யுங்கள். கர்த்தர் நீதியை மழையாய் பொழியப் பண்ணுவார்.

நாம் பரிசுத்தமுள்ள கிறிஸ்தவர் களாக வாழ பரிசுத்த பவுல் கிருபை யையும் யாக்கோபு செயல்களையும் வலியுறுத்துகிறதைப் பார்க்கிறோம். ஆனால் சரியாகச் சொன்னால் இரண் டையும் சார்ந்து வாழ்வதே தெய்வ சித்தம்.

இப்படி பரிசுத்தமாய் வாழ கடவுளின் கிருபை தேவை. மனி தனின் செயல்பாடும் அவசியம். கடவு ளின் கிருபையைப் பற்றிக் கொண்டு அவருக்கு ஏற்ற செயல்களைப் புரிந்து பரிசுத்தமாய் வாழ்வோம். அப்படி செய்வதன் மூலம் நம்மைக் குறித்த அவருடைய மேலான சித்தத்தை நிறைவேற்றுவோம். ●

May God help us.
கடவுளின் கிருபையில்,

**Dr. J.Johnson Sundararj,** Ph.D
Former Vice - Principal, American College, Contact no: 9843680054

**உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தரா யிருங்கள் (1 பேதுரு 1:15).**

21ஆம் பக்க தொடர்ச்சி...

விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கப்பண்ண வேண்டுமா? இந்த சத்தியத்தை அறிந்து கொண்டு புதிய ஏற்பாட்டு விசுவாசிக்கான புரிதலைப் கொண்டு கொடுக்க ஆரம்பியுங்கள்! ''கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்'' என்று (லூக்.6:38)ல் இயேசு தாமே தமது வாயிலாக நமக்குச் சொல்லியிருக்கிறாரே. கர்த்தர் உங்களுக்கு நீதியின் விளைச்சலை வர்த்திக்கப்பண்ணி ஆசீர்வதிப்பார்!

முற்றும்

பாஸ்டர். சாம் இராமலிங்கம் போன்: 9443423660 ●

## தற்பரிசோதனைக் கேள்விகள்

ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஏழு முக்கிய கேள்விகளை சந்திக்க வேண்டியது அவசியமான ஒன்றாகும். இக்கேள்விகளுக்கான பதில் சீர்படுத்தும் பதிலாக அமையாவிட்டால் அது ஆவிக்குரிய வாழ்க்கையில் பாதகத்தை விளைவிக்கும். எனவே ஒன்றன்பின் ஒன்றாக இக்கேள்விகளை நமக்கு நாமே கேட்டு, உண்மையாய் தற்பரி சோதனை செய்வோம்.

1. ஒரு காரியத்தை பாவம் என்று அறிந்த பின்னும் பாவம் செய்கிறேனா?
2. நான் தேவ சித்தத்திற்கு கீழ்ப்படிந்து நடக்கிறேனா?
3. ஒவ்வொரு நாளும் ஜெபத்தில் தரித்திருக்கிறேனா?
4. வேத வசனத்தை படிக்கும் ஆர்வமுள்ள மாணாக்கராக இருக்கிறேனா?
5. கிறிஸ்துவை வெளிப்படையாக அறிவிக்கின்றேனா?
6. தேவன் எனக்குக் கொடுத்த ஆசீர்வாதத்தின் அளவின்படி அவருக்குக் கொடுக்கின்றேனா?
7. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிற்காக குறிப்பாக நான் எதையாவது செய்கின்றேனா? - ஆஸ்வால்ட் து. ஸ்மித் ●

''**தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்**'' (பிலிப்.4:6)

### கிறிஸ்தவ ஆலோசனை மையம்

இன்றைய உலகில் உள்ள போராட்டமான சூழ்நிலைகளினாலும், பிசாசின் தந்திரங்களினாலும் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள், தனிப்பட்ட நபர்கள் ஆகியோருக்கு இலவசமாக ஆலோசனைகள், ஜெப உதவி வழங்கும் பொருட்டு திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ''கிறிஸ்தவ ஆலோசனை மையம்'' இயங்கும். பிரச்சனைகள் இரகசியமாக வைக்கப்படும்.

**தொடர்புகொள்ள: 98421 43523 / அலுவலக முகவரி: 3ஆம் பக்கம் உள்ளபடி**

# எனக்கு ஏன் சோதனைகள்?

**"கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள், அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" (சங்.34:8).**

**ருசித்துப் பாருங்கள்:**

ஒரு தின்பண்டத்தை அல்லது ஆகாரத்தைச் சாப்பிட்டுப் பார்க்கும் பொழுதுதான் அதன் சுவை அல்லது ருசி என்ன என்பது தெரியும். அது போலத்தான் கர்த்தர் நல்லவர் என்பதை நாம் ருசித்துப் பார்க்க வேண்டு மானால் அவரை அறிந்து அனுபவிக்க வேண்டும். உதாரணமாக தானியேல் சிங்கக்கெபியிலே போடப்பட்டான். சிங்கங்கள் சேதப்படுத்தாதப்படிக்கு தானியேல் பாதுகாக்கப்பட்டதை அறிந்திருக்கிறோம். அவன் நல்லவனாக இருந்தால் ஏன் அவனைச் சிங்கக் கெபியில் போட அனுமதிக்க வேண்டும்? சிங்கக்கெபியிலே போடப்படாமல் பாதுகாக்கப்படுவது என்பது கர்த்தர் நல்லவர் என்பதை ருசிபார்க்கிற அனுபவம்தான். ஆனால் அதைவிடப் பலமடங்கு மேன்மையான அனுபவம் சிங்கக்கெபியிலே போடப்பட்டு சிங்கங்களால் சேதப்படுத்தப்படாமல் பாதுகாக்கப்படுவது ஆகும். சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் அக்கினிச்சூளையில் போடப்பட்டனர். அவர்கள் நல்லவர்களாக இருந்தால் ஏன் அக்கினிச்சூளையில் போடப்பட வேண்டும்? கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பார்க்கும்படியாகவே. ருசித்துப் பாருங்கள் என்ற வார்த்தை நமக்கு சந்தோஷம் அளிப்பதாக இருக்கிறது. ஆனால் ருசித்துப் பார்க்கும்படியாக சிங்கக்கெபி, அக்கினிச்சூளை போன்ற சூழ்நிலைகளில் போகிறதுதான் நமக்கு விருப்பமில்லாமல் இருக்கிறது. நம்முடைய இயேசு நல்லவராகவே இருப்பதால், அவருடைய ஜனங்களுக்கு துன்பமே இல்லை என்பது இதனுடைய பொருள் அல்ல. நாகூம் தீர்க்கதரிசி முதலாம் அதிகாரத்தில் கர்த்தர் நல்லவர் என்று சொல்லிவிட்டு, "சிதறடிக்கிறவன் உன் முகத்துக்கு முன்பாக வருகிறான்" என்று (நாகூம்.2:1)ல் கூறுகிறார். அவர் நல்லவர்தான், அதனால் தான் "அரணைக் காத்துக்கொள், வழியைக் காவல்பண்ணு, அரையைக் கெட்டியாய் கட்டிக்கொள், உன் பெலனை மிகவும் ஸ்திரப்படுத்து" என்று எச்சரிப்புக் கொடுக்கிறார். அதாவது இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக அசீரியன் வருவான் என்று ஓர் எச்சரிப்புக் கொடுக்கப்படுகிறது.

புதிய ஏற்பாட்டு சபையோடு ஒப்பிடும்போது சிதறடிக்கிறவன் என்பது அந்திக் கிறிஸ்துவைக் காண்பிக்கிறது. நாகூம் 2:2இல் ஒருவேளை அசீரியனால் பாதிப்புகள் அதாவது பலவித கஷ்டங்கள், துன்பங்கள் இருந்தாலும் தம்முடைய ஜனத்தின் மகிமையை திரும்ப வரப்பண்ணுவார் என்று எழுதப்பட்டுள்ளது. புடமிடக்கூடிய அக்கினி என்று சொன்னால், அந்த **அக்கினியானது பொன், வெள்ளி போன்றவற்றிலுள்ள களிம்புகளை நீக்கி, சுத்தப் பொன்னாக,**

**சுத்த வெள்ளியாக மாற்றுகிறது. அவ்விதமாகவே கர்த்தருடைய அக்கினி யானது கர்த்தருடைய பிள்ளைகளைப் புடமிடுகிற அக்கினியாகவும், கர்த்தருடைய பிள்ளைகளின் சத்துருக்களைப் பட்சிக்கிற அக்கினியாகவும் இருக்கிறது.** கர்த்தர் நல்லவர் என்றால் அவர் தம்முடைய பிள்ளைகளைத் துன்பக்கடலுக்குள் தத்தளிக்க விடுவது ஏன்? பல சந்தர்ப்பங்களில் அவர் நம்மைச் சத்துருக்களின் கையில் ஒப்புக்கொடுத்து விடுவது ஏன்? கேளுங்கள் கொடுக்கப்படும் என்றவர் எவ்வளவு கதறிக் கதறிக் கேட்டாலும் கொடுக்காமல் மௌனமாகவே இருக்கிறாரே ஏன்? சங்கீதக்காரன் (சங்.73:13,14)ல் சொல்லும்பொழுது, நான் என் குற்றங்களை உணர்ந்து மனஸ்தாபப்பட்டாலும் ஒவ்வொருநாளும் வாதிக்கப்படுவதும், தண்டிக்கப்படுவதும் ஏன்? என்று கேட்கிறார். கர்த்தராகிய இயேசு இந்த உலகத்தில் இருந்தபொழுது யோவா.16:33இல் உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு என்கிற சத்தியத்தைச் சொல்வதற்காகத்தான், என்னிடத்தில் சமாதானம் உண்டா யிருக்கும்பொருட்டு நான் உங்களுக்குச் சொன்னேன். “திடன் கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன்” என்றார். கர்த்தராகிய இயேசு சிலுவை மரணத்திற்கு முன்பு சொன்ன கடைசி சத்தியங்களில் ஒன்றுதான் இது. 1 தெச. 3:3இல் வாசிக்கும்பொழுது இப்படிப்பட்ட உபத்திரவங்களை, துன்பங் களை சகிக்கும்படியாகத்தான் நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோம் என்ற நல்ல அறிவு, தெசலோனிக்கேயர் சபையாருக்கு இருந்தது. இந்த அறிவு நமக்கும் இருக்க வேண்டும்.

## நம்முடைய நல்ல கர்த்தர் நமக்கு உபத்திரவங்கள், துன்பங்களை அனுமதிப்பது ஏன்?

நீதி.3:12ன்படி தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனைச் சிட்சிக்கிறதுபோல கர்த்தரும் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனைச் சிட்சிக்கிறார். ஒவ் வொரு துன்பமும் ஒரு மறைவான ஆசீர்வாதமாகவே இருக்கிறது. உபா.8:5ன் படி ஒருவன் தன் புத்திரனை சிட்சிக்கிறதுபோல உன் தேவனாகிய கர்த்தர் உன்னை சிட்சிக்கிறார் என்பதை நீ உன் இருதயத்தில் அறிந்து கொள்வாயாக. கர்த்தர் தம்மை நேசிக்கிறவர்களை சிட்சிக்கிறார். நமக்கு உபத்திரவங்கள், துன்பங்கள், சிட்சைகள் வருகிறதென்றால் ஓர் அப்பா தன் பிள்ளையை நேசிக் கிறது போல தேவன் நம்மை நேசிக்கிறார் என்று அர்த்தம். யோபு 5:17இல் தேவன் தண்டிக்கிற மனுஷன் பாக்கியவான், ஆதலால் சர்வ வல்லவருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதிரும் என்று எழுதப்பட்டுள்ளது. அதாவது துன்பங்களைச் சகிப்பதுதான் பாக்கியம். அக்கினிமயமான சோதனை, பரீட்சை நம்மைச் சுத்திகரிக்கிறது (மல்.3:3). பக்தனாகிய யோபு சொல்லும்போது, “ஆனாலும் **நான் போகும் வழியை அவர் அறிவார்; அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்**” (யோபு 23:10) என்கிறார்.

நாம் சுத்தப் பொன்னாக விளங்கும்படியாக அவர் நமக்குச் சோதனைகளை அனுமதிக்கிறார். அடுத்ததாக யோபு 34:31இல் நாம் பாவம் செய்யாதபடி, நம்மைப் பாதுகாக்கும்படியாக அனுமதிக்கிறார். சங்.119:67ன்படி நாம் நேர்மையான வழியில் நடக்க உபத்திரவங்களை அனுமதிக்கிறார். துன்பங்கள் உள்ளான மனுஷனை புதிதாக்குகிறது (2கொரி.4:16). யாக்.1:3ன்படி விசுவாசத்தின் பரீட்சை பொறுமை என்கிற நற்குணத்தை நம்முடைய ஜீவியத்தில் உருவாக்குகிறது. யோவான் 15:2ன்படி நாம் அதிக கனிகளைக் கொடுக்கும்படியாக அதாவது நாம் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தும்படி உபத்திரவங்கள் அனுமதிக்கப்படுகிறது. அது தேவனோடு உள்ள உறவை நம் வாழ்க்கையில் புதுப்பிக்கிறது. சக.13:9இல் பொன் அக்கினிக்குள் போட்டு புடமிடப்படுவதுபோல அக்கினிக்குள் நம்மைக் கொண்டு செல்கிறார். இதன்மூலம் அவர் நம்மோடுள்ள உறவையும், நாம் அவரோடுள்ள உறவையும் புதுப்பித்துக் கொள்கிறோம். யோனா.2:2 யோனாவின் வாழ்க்கையில் நெருக்கங்கள் ஏன் அனுமதிக்கப்பட்டன? அந்த சூழ்நிலையில் அவன் தன்னை உணர்ந்து ஜெபித்தான். அவனுடைய ஜெபம் கேட்கப் படும்படியாக அப்படி நடத்தினார். ஏசாயா 48:10ன்படி துன்பங்கள், பாடுகள் தேவன் நம்மைத் தெரிந்தெடுக்க ஏதுவாக இருக்கிறது. அக்கினிக் குகைக்குள் உலோகங்கள் கொண்டு போகப்படுவது போல நம்மை உபத்திரவத்தின் குகைக்குள் கொண்டு சென்று அங்கே நம்மைத் தெரிந்துகொண்டேன் என்று சொல்கிறார். ஆதலால் கர்த்தர் நல்லவர். 1 கொரி.11:32ன்படி துன்பங்கள், பாடுகள் நம்மை ஆக்கினைக்குத் தப்புவிக்கிறது. 1 பேது.1:7, 2 கொரி.4 :17ன் படி உபத்திரவங்கள் நமக்கு அதிக நித்திய கனமகிமையைக் கொண்டு வருகிறது. பரிசுத்த பவுல் அனுபவித்த உபத்திரவங்கள் எபேசு சபையாருக்கு மகிமையாக மாறினது. தேவனுடைய சபைக்கு மகிமையாகக் காணப்படும்படி தேவனுடைய ஊழியர்களை அவர் பாடுகளின் பாதைகளில் நடத்துகிறார்.

**பாடுகள், துன்பங்களின் மத்தியில் நாம் எப்படி இருக்க வேண்டும்?**

பாடுகள், துன்பங்களின் மத்தியில் சோர்ந்து போகாமல் கர்த்தர் நல்லவர், கர்த்தர் நல்லவர் என்று அறிக்கையிட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். அதுவும் தேவனுடைய இரக்கம் தான். எனவேதான் இப்படிப்பட்ட ஊழியத்தை உடைய நாங்கள் இரக்கம் பெற்றிருப்பதால் சோர்ந்து போகிறதில்லை என்று வாசிக்கிறோம். யாக்.1:3இல் சொல்லப்பட்டதுபோல் நமக்கு ஏற்படுகிற துன்பங்கள், பாடுகளை நாம் சந்தோஷமாகவே எண்ண வேண்டும். அவரிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் அதாவது துக்கமான சம்பவங்களும், மகிழ்ச்சிகரமான சம்பவங்களும் நன்மைக்கு ஏதுவாகவே நடைபெறுகிறது.

ஆப.2:3ன்படி நல்ல தேவன் அதை நன்மைக்காகவே அனுமதித்தார் என்பது முடிவிலே விளங்கும். எதுவரைக்கும் உமது முகத்தை எனக்கு மறைப்பீர்? கர்த்தாவே எதுவரைக்கும் என்னை மறந்து இருப்பீர்? என்று நாம் கேட்டுக் கொண்டேயிருப்பதின் காரணம் என்ன? நம்முடைய நல்ல தேவனைப் பற்றி சரியாக அறியாததினால் தான். கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு கூப்பிட்டு இளைத்துப் போனேன், தொண்டை வறண்டு போனது, கர்த்தர் எனக்குத் தந்த வாக்குத்தத்தங்கள் எல்லாம் ஒழிந்து போய்விட்டதா? என்மேல் கிருபை இல்லாமல் போய்விட்டதா? அவர் நல்லவராக இருந்தால் இப்படியெல்லாம் ஏன் சம்பவிக்கிறது? ஏன் இத்தனை தாமதம் என்ற கேள்விகளையும், சந்தேகங் களையும் சாத்தான் நமக்குள் கொண்டு வருவான். ஒருமுறை கர்த்தரால் அன்புகூரப்பட்ட சீஷர்கள் சென்ற படகு நடுக்கடலில் அலைவுபட்டதினால் இரவெல்லாம் மிகுந்த வேதனையோடு கலங்கிக் கொண்டிருந்தனர். அவரோ அக்கறையற்றவரைப் போல, கண்டும் காணாதவர் போல தாமதித்துக் கொண்டிருந்தார். இன்னொருமுறை அவர் நேசித்த லாசரு வியாதியாயிருக் கிறான் என்ற செய்தி கேள்விபட்டவுடனே அங்கு செல்லாமல், அவன் மரித்தும் நான்கு நாட்கள் தாமதித்துக் கொண்டிருந்தார். கர்த்தர் நல்லவரானால் ஏன் இந்த தாமதம்? லாசரு மரித்து நான்கு நாட்கள் கழித்து கல்லறைக்குச் சென்று கண்ணீர்விட்டார். மரித்த லாசருவை உயிரோடே எழுப்பி மார்த்தாள், மரியாளின் துயரக் கண்ணீரை ஆனந்தக் கண்ணீராக மாற்றினார். கர்த்தருடைய பிள்ளையே, கர்த்தர் நல்லவர் என்பதை எந்த சூழ்நிலையிலும் சந்தேகப்படாதீர்கள். கடல் கொந்தளித்தாலும், உங்களுடைய படகு அலசடிப்பட்டாலும், உங்கள் லாசரு மரித்தாலும் அவருடைய தாமதத்தைப் பற்றி நீங்கள் கவலைப்படவோ, இடறவோ, பின்வாங்கவோ வேண்டாம். அவர் தாமதித்து வந்தாலும் அதுவும் நன்மையாகத்தான் இருக்கும்.

### தீமைகள் எவ்விதம் நன்மையாக மாறுகிறது?

கர்த்தர் நல்லவராக இருந்தால் 2 கொரி.11:26,27இல் சொல்லப்பட்டுள்ள இத்தனை பாடுகளும் பரி. பவுலின் வாழ்க்கையில் ஏன் நேரிட வேண்டும்? பரி.பவுலாகிய ஒரு நீதிமானைக் காப்பாற்றும்படியாக கர்த்தர் எத்தனையோ குற்றவாளிகளையும் காப்பாற்றுகிறார் (அப்.27:41-44). சமுத்திரத்தில் உண்டான மோசம் மற்றவர்களுக்கு நன்மையும் ஆசீர்வாதமாக இருக்க ஏது வாயிற்று. ஏனென்றால் அவர் நீதிமான்கள் மீதும் அநீதிமான்கள் மீதும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, தமது மழையைப் பெய்யப்பண்ணுகிறார். மற்ற வர்களும் கர்த்தர் நல்லவர் என்பதை ருசிபார்க்க ஏதுவாயிற்று. ஆறுகளால் வந்த மோசம், சமுத்திரத்தால் வந்த மோசம், பயங்கரமான கப்பல் விபத்து இவையெல்லாம் பரி. பவுலுக்கு சரீரத்தில் பயங்கரமான பாடுகளைக் கொண்டு வந்தன. இவைகளெல்லாம் நேரிட்டபோதும் பரி.பவுலின் ஆத்துமா

தேவனுடைய அன்பை விட்டுப் பிரித்து விடவில்லை. அவைகள் தேவனோடுள்ள நெருங்கிய ஐக்கியத்திற்கு வழிநடத்தின. நம்முடைய வாழ்க் கையில் நாம் கர்த்தரோடு அதிகமாக நெருங்கி ஜீவிக்கும்படியாகப் பலவிதமான காரியங்களை நம் நல்ல கர்த்தர் அனுமதிக்கிறார். பரி.பவுலைக் காப்பாற்றிய தேவன் நம் வாழ்க்கையில் ஏற்பட்ட எத்தனையோ தீங்குகளிலிருந்து நம்மையும் பாதுகாத்தார். அதற்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். யோபுவின் பத்து பிள்ளைகளும் ஒரே நாளில் கொல்லப்பட்டனர். அதுபோல நம் வாழ்க்கையிலும் சில இழப்புகள் வந்திருக்கக் கூடும். யோபு.42ஆம் அதிகாரத்தில், யோபு இழந்த எல்லாவற்றையும் அதாவது மிருக ஜீவன்கள், ஆஸ்தி அந்தஸ்துக்களை தேவன் இரண்டத்தனையாகத் திரும்பக் கொடுத்தார். ஆனால் பிள்ளைகளை மாத்திரம் இரண்டத்தனையாகக் கொடுக்கவில்லை. ஏனென்றால் அவர்கள் மரித்தாலும் பரலோகத்திற்குச் சென்றனர். தேவன் கோபமடைந்து என்னைத் தண்டித்துவிட்டார் என்று ஒருபோதும் எண்ண வேண்டாம். தேவன் உன்மீது கோபமடைந்து உன்னைத் தண்டிக்கவில்லை. கர்த்தர் நல்லவர். மறைமுகமான ஏதோ ஒரு ஆசீர்வாதம் இரண்டத்தனையாக அல்ல, பல மடங்கு, கோடிக்கணக்கான மடங்கு ஆசீர்வதிக்கும்படியாகவே அவ்விதம் நடத்தினார். **மத்திய வானில் நம்முடைய மணவாளனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது நாம் அவரோடுகூட எடுத்துக் கொள்ளப்படும்படியாக விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை நமக்குத் தந்திருக்கிறார். நான் மீண்டும் வந்து உங்களை என்னண்டையில் சேர்த்துக் கொள்வேன்** என்று கூறுகிறார். ஆகவே நாம் எந்தப் பாதைகளில் கடந்து போனாலும், எந்தச் சூழ்நிலையில் இருந்தாலும் கர்த்தரை நோக்கிப் பார்த்து கர்த்தர் நல்லவர் என்பதை அறிக்கையிட்டு இந்த ஆண்டிலும்கூட அவரைப் பலமடங்கு நல்லவராகவே அனுபவிப்போமாக!

## தீர்க்கதரிசனம் உரைப்பதின் பலன்

நீங்கள் தீர்க்கதரிசனம் உரைக்காமலிருப்பது நல்லது. ஏனெனில் நீங்கள் தவறாக தீர்க்கதரிசனம் உரைத்தால் கேட்டவர்கள் அதை மறக்கவே மாட்டார்கள். அநேகருடனும் பகிர்ந்துகொள்வார்கள். அது வேகமாகப் பரவும். நீங்கள் சரியாக தீர்க்கதரிசனம் உரைத்தால் கேட்பவர்கள் அதை மனதில் வைத்துக் கொள்வதில்லை.

- ஜாண் பில்லிங்ஸ்

**"நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாக சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை" [1 கொரி.13:2].**

RNI NO. TNTAM/2001/06473

# வேர்டு ஆஃப் கிரைஸ்ட்

## கிறிஸ்தவ இலக்கிய புத்தக சாலை

## கிளைகள்

**பெரியகுளம் :**
ஜே.டி.என். பில்டிங்ஸ், வைகை அணை ரோடு,
பெரியகுளம் – 625 601. போன் : 04546 232689

**மதுரை :**
ராஜம் பிளாசா, தல்லாகுளம்,
மதுரை – 625 002. போன்: 0452 2535373.

**திருச்சி :**
எண்.1F, ஒய்.எம்.சி.ஏ. வளாகம்,
ஈ.வே.ரா.ரோடு, புத்தூர், திருச்சி – 620 017.
போன் : 0431 2792266.

**கெல்லிஸ் :**
எண்.100/3, நிர்மலா அப்பார்ட்மெண்ட்,
மேடவாக்கம் டேங்க் ரோடு, கெல்லிஸ்,
சென்னை–10. போன் 044 26613242 / 42640111.

**அடையார் :**
ஹபீப் காம்ளக்ஸ், எண்.5 துர்க்காபாய் தேஸ்முக்
ரோடு, சத்தியா ஸ்டுடியோ அருகில்,
சென்னை–28. போன் 044 24616161.

**தாம்பரம் :**
பழைய எண்.57 புதிய எண்.12,
வெங்கடேசன் தெரு, தாம்பரம் மேற்கு,
சென்னை–45. போன் 044 – 22260743.

**போரூர் :**
எண்.22/1–A, ஆற்காடு ரோடு,
BSNL டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் அருகில்,
போரூர், சென்னை–600 116. போன் : 044 – 24762520.

**புதுச்சேரி :**
எண்.66, செங்குந்தர் வீதி,
உருலான்பேட், நெல்லித்தோப்பு,
புதுச்சேரி – 605 005. போன் 0413 2204122.

**திமாப்பூர் :**
எண்.20, நியாமோ லோக்தா ரோடு,
திமாப்பூர் – 797 112. நாகலாந்து.
போன் : 03862 230207.

**இட்டா நகர் :**
ஆர்.கே. மிஷன் ரோடு, இட்டா நகர்,
அருணாச்சல் பிரதேஷ் – 791 113.
போன் : 0360 2217563.

**ஷில்லாங் :**
கேஜேபி அசெம்பிளி கான்பிரன்ஸ் சென்டர்
ஸ்டேட் சென்ட்ரல் நூல் நிலையம் எதிரில்,
ஷில்லாங். போன்: 0364–2500044 / 9445366066

**தூரா :**
ரிங்கேரி, மேற்கு காரோ ஹில்ஸ், தூரா,
மெகாலயா – 794 001.
மொபைல் : 03651 224729.

**போரிவலி (மே) :**
பில்பெரி, கடை எண்.1. ஐ.சி.காலனி,
கார்ப்பரேஷன் பேங்க் அருகில், போரிவலி மேற்கு,
மும்பை – 400103. போன் :022 28925763 / 09967645333

**ஹுப்ளி :**
எண்.L/1, சுவிதா அனெக்ஸ், கான்வென்ட் பள்ளி,
எதிரில், ஃபுட் பாஸ்கட் அருகில்,
கேஷ்வாஷபூர், ஹுப்ளி – 23,
போன் : 0836 6290555.

**கர்நாடகா:**
எண்.71, நேரு மெயின் ரோடு,
அரவிந் நகர்,
கமன ஹல்லி, (Below) முத்தூட் பைனான்ஸ்,
பெங்களூர் – 560 084. போன் : 08025 461144.

**நாகலாந்து :**
c.k.ஆர்காடு, தலைமை அஞ்சல் அலுவலகம்,
எதிரில், கொஹிமா – 797 001, நாகலாந்து.
போன் : 0370 2292222.

e-mail to : wocmdu@gmail.com

**Owned, Edited and Published by K. Selwyn Thangadurai,**
D.No.23B, "Thy Grace", Sebastian Church Road, New Ellis Nagar Extn., Madurai - 16.
Ph:0452:4345580. E-mail : wocmdu@gmail.com.
**website: www.wordofchrist.org**
Printed by Mr. Simon Peter at Vasanth Prints & Packs, No.45, Soorappa Mudali Street, Triplicane, Chennai - 600 005. Tamilnadu, India. Ph.044 28485805